காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

12—3—72

★

உள்ளே......

விலை கூறுகிறாரா
விநாயகமூர்த்தி?
(தலையங்கம்)

ஒன்றுபட்டு
வாழ்வதற்கு!
(டாக்டர் அறிஞர் அண்ணா)

அண்ணன்மேல்
ஆணை!
(சிறப்புக் கட்டுரை)

புட்டோ எப்போது
யாகியாகான் ஆவார்?
(கட்டுரை)

விலை 25 காசு

படை புறப்படட்டும்!

★

'முன்னாளில் தமிழுக்குத் தீங்கிழைத்தோர்
முடிந்திட்டார்!' தமிழாய்ந்தோர் ஆளுகின்ற
பொன்னாளே ஈதென்று' எண்ணும் வேளை
புறப்பட்டார் போர்தொடுத்தார் தாயின் மீதே!
சின்னாட்கு முன்பவர்தாம் மாணாக்கர்கள்
சிலபேரைத் துணையாக்கி முடித்தார் இங்கே
பொன்னாட்சி செய்வோரை ஏசி! பாம்பின்
புற்றினிலே புதையலுமா கிடைக்கக் கூடும்?

தாலாட்டிச் சீராட்டிப் பாலும் ஊட்டித்
தாரணியில் உலவவிட்ட தாயை விட்டே,
வாலாட்டும் ஆங்கிலத்தைத் தாவுகின்றோர்
வாழ்க்கையை இவ்விடத்தே எண்ணிப் பார்த்தால்
வேலாடும் விழியுடையாள் துணையிருக்க
வேசியினை நாடுவோனின் தோற்றம் தோன்றும்
பாலோடு நான்உண்ட தமிழ்மீ தாணை
பாவியரை யழிக்காமல் உறக்கம் கொள்ளேன்.

தமிழர்தம் செந்தமிழுக் கெதிரி யென்றால்,
தாரணியில் இதைவிடவும் கொடுமை யுண்டோ?
இமையிரண்டும் கண்களையும் வெறுத்தல்; இங்கே
இளங்குழவி, தாய்தன்னை வெறுத்தல் ஒக்கும்!
உமைவேண்டி நிற்கின்றேன் உமது கைகள்
உயரட்டும் நம்தாயின் மானம் காக்க!
இமைப்போதும் தயங்காதீர் சூளெடுத்து
இன்றைக்கே போர்ப்படைகள் புறப்ப டட்டும்.

[illegible]..

(11-ஆம் பக்கத் தொடர்ச்சி)

—அதாவது நண்பா, இந்தக் கருத்துக்களை யார் படிக்கிறார்களோ, அவர்கள் தாங்கள் ஒழுகவேண்டிய ஒரு நெறி அல்லவா இது! பாருக்குப் படிக்கக் கொடுத்தவர்களுக்கும் இது பொருந்தும்மல்லவா!

குமுதத்தின் மனம் புண்படும்படியாக யாராவது ஏதாவது பேசி, அல்லது எழுதி இருந்தால்கூட, அதை யாரிடமும் காட்டிக் கொள்ளாது என்ற பொருளும் இதற்கு உண்டல்லவா?

சரி, இப்போது ஐந்து என்ற அடைப்புக்குறிக்குள் உள்ளதைப் படி!

இன்றைக்கு மாத்திரம் எதற்கும் பயப்படாமலிருப்பேன்!

என்று கூறப்பட்டுள்ளதல்லவா!

இச் செகத்திலுள்ள பேர்கள் எதிர்த்து வந்த போதிலும், பிச்சை வாங்கி உண்ணும் வாழ்வைப் பெற்றுவிட்டபோதிலும், பச்சை வேர்ப் படைகள் வந்து பாரழித்தபோதிலும் அச்சமில்லை! அச்சமில்லை!! அச்சமில்லை!!! என்று அன்றைக்கு வீர முழக்கம் எழுப்பிய பாரதியை நினைவூட்டுகிறதல்லவா, இந்தச் சொற்றொடர்கள்! என்ன நிகழ்ந்தாலும் குமுதம் அஞ்சாது என்றும் நாம் பொருள் கொள்ளலாமல்லவா!

இந்த மூன்றையும், ஐந்தையும் மட்டுமே மோதவிட்டுப் பார்ப்போம்!

மனம் புண்படுகிறமாதிரி எது நடந்திருந்தாலும் அதனை எவரிடமும் காட்டிக்கொள்ளாத பேராண்மை மிகுந்த வலிய, அடக்கம் மிகுந்த இதயம் உள்ள அது, ஐந்தில் கூறப்பட்டுள்ளதுபோல, ஏற்படக் கூடாத ஒன்று ஏற்பட்டுவிட்டால் பயப்படாமல், வெளியில் சொல்லாமல் இருந்துவிடுமா?

குமுதத்தாலேயே அப்படி இருக்க முடியாது என்பதை "இன்றைக்கு மாத்திரம்" என்ற சிந்தனைகளை ஏந்தி வந்திருக்கும் அதே இதழின் தலையங்கப் பகுதி காட்டிக் கொடுத்துவிடுகிறதே நண்பா!

இந்த முரண்பாட்டைச் சுட்டிக் காட்டுவதற்குமட்டுமல்ல, நண்பா, நான் அந்த சிந்தனைகளுக்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து விளக்கம் கொடுக்க முன் வந்ததற்குக் காரணம்.

மொத்தமாகப் பார்க்கும்போது குமுதம் மட்டுமே அல்ல; அந்தச் சிந்தனைகளை அன்றாடம் எழுந்தவுடன், நாட்டவர்கள் அத்தனைப் பேருமே நினைவுக்குக் கொண்டுவந்து ஒழுகவேண்டும் என்றுதான் விரும்புகிறேன்!

53 கோடிப் பேரும் அப்படிச் செய்யமுடியாவிட்டால், சில அரசியல் தலைவர்களும், தொழிற் சங்கத் தலைவர்களுமாவது, செயல் படுத்த முன் வந்தால் எப்படி இருக்கும் என்று எண்ணினேன்! கனத்திருந்த இதயச் சுமை தளர்ந்து, உன்னுடன் மீண்டும் தொடர்பு கொள்ளும் வாய்ப்புப் பிறந்தது. சிறப்பாக,

இந்திரா அம்மையார்களும்,
காமராசர்களும்,
பக்தவத்சலங்களும்,
இராமமூர்த்திகளும்,
குமாரமங்கலங்களும்

மட்டுமாவது செயல்படும் பொறுப்பை "குமுதம்" மேற்கொண்டால், அந்தச் சிந்தனைகளில் ஆறு என்ற அடைப்புக் குறிக்குள்

இன்றைக்கு மாத்திரம், யாருக்கேனும் ஓர் உபகாரம் செய்துவிட்டு, அதை வெளியில் சொல்லாமலிருப்பேன்

எனக் கூறப்பட்டிருப்பதற்கு நல்லதோர் இலக்கியம் அமைந்ததாக இருக்கும்—எதிர்பார்க்க முடியுமா நண்பா!

அன்புள்ள,



(15-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தக்க அறிவிப்பினையும் வெளியிட்டிருக்கிறார் புட்டோ!

இந்த ஆண்டு ஆகஸ்டு 14 முதல் பாகிஸ்தானில் இராணுவ ஆட்சி நீக்கப்பட்டு, ஜனநாயக ஆட்சி மலர்விக்கப்படும் என்ற அறிவிப்பும் இப்போது வந்திருக்கிறது.

உள்நாட்டுக்குள் தலைவலியைக் கொடுத்துக் கொண்டிருந்த எல்லா எதிர்க் கட்சித் தலைவர்களையும் கூட்டிவைத்து இப்போது சமரசம் பேசி, இந்த முடிவை அறிவித்திருக்கிறாராம்!

அனைத்து பாகிஸ்தான் மாநிலங்களிலிருந்தும் சென்றஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் மன்றக் கூட்டம் அடுத்த ஏப்ரல் 14இல் கூட்டப்பட்டு, கூட்டப்படும் அந்தக்கூட்டம் மூன்றே மூன்று நாட்களுக்கு மட்டும் நடைபெற்று, அந்தக் கூட்டத்தில், பாகிஸ்தான் அதிபர் புட்டோவின் மீது நம்பிக்கை இருப்பதாகவும், ஆகஸ்டு 14-வரையில் இராணுவ ஆட்சிக்கு புட்டோவுக்கு அனுமதி அளித்தும் தீர்மானங்களை நிறைவேற்றிவிட்டு, உடன்கலைந்துவிடுமாம்!

எதிர்கட்சித் தலைவர்கள் அனைவரும் இதற்கு ஒப்புதல் அளித்துவிட்டார்கள் என்றும் செய்திகள் தரப்பட்டுள்ளன.

இராணுவத் தலைமையின் மாற்றத்தையடுத்து அதிபர் புட்டோ—

"ஆசியாவிலேயே சிறந்த போர் இயந்திரத்தை ஏற்படுத்துவது என்னுடைய நாட்டு மக்களது புனிதப் பணியும், கடமையுமாகும்"

—என்று தெரிவித்திருப்பதிலிருந்து, வேறொன்றையும் எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது.

ஆகஸ்ட் மத்திவரையில், காலங்கடத்திக் கொண்டேபோய், அதற்கிடையில் இராணுவப் பலத்தை மிகுதிப்படுத்திக்கொண்டு மீண்டும் போர் முஸ்தீபிலிறங்கி, அதன் பேரால் இராணுவச்சட்ட ஆட்சியை நீட்டித்துக் கொண்டிருக்க, இப்படியொருவழியை அவர் கையாண்டிருக்கலாம் என்று கூடக் கருத முடியும். இன்னொரு போர் பற்றியும் அவரது இதயத்தில் எண்ணங்கள் கனன்று கொண்டிருக்கவும் கூடும் என்பதற்கும் இது சரியான கரியாகும்.

அதிபர் புட்டோ இன்றைக்குப் பயங்கரமான நெருக்கடியில் சிக்கி இருக்கிறார் என்று மட்டும் இப்போது புரிகிறது. அதற்காகவே ஜனநாயகத்தை ஆபத்பாந்தவனாக அழைக்கிறார் என்பதும்தெரிகிறது.

ஆனால், அவர் எப்போது யாகியாகானாகப் போகிறார் என்பது போகப் போகத் தெரிந்துவிடும்!

உலகச் சர்வாதிகாரிகளின் பட்டியலில், புட்டோவின் பெயர் எந்தவிதத்தில் பொறிக்கப்படப் போகிறது என்பதை காத்திருந்து தான் காணவேண்டும். *



காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 13 ஆறுமாத சந்தா ரூ. 6-50

மலர் 8 | 12—3—72 | இதழ் 35

விலை கூறுகிறாரா விநாயகமூர்த்தி?

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீதுள்ள காழ்ப்புணர்ச்சி காரணமாக, காங்கிரஸ்காரர்களுக்குத் தாங்கள் என்னதான் பேசுகிறோம் என்பதைக் கூட புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு உணர்ச்சிக் கெட்டுப் போய்விட்டதோ என்று எண்ணவேண்டியிருக்கிறது உணர்ச்சி என்ற ஒன்று இருந்தாலல்லவா கெட்டுப் போவதற்கு என்று பொதுமக்கள் கேட்டாலும், நம்மால் அப்படி உணரமுடியவில்லை.

குடிக்கக் கிடைத்த கூழ், கொள்ளை கொடுக்கப் பட்டுவிட்டால் குப்பனுக்குக் கூட கோபம் கொப்பளிக்கத்தான் செய்யும். அதற்காகத் தன் அன்பரசியை அழைத்துப்போய் அடுத்த வீட்டுக்காரனிடம் விட்டுவிடமாட்டான் அவன்! ஆனால் காங்கிரஸ்கட்சியிலே மிகவும்ஊறிப்போனவர்என்ற மகுடத்துக்கு உரியவரான எஸ் ஜி. விநாயகமூர்த்தி என்ற மாநகராட்சி மன்ற உறுப்பினர் பாவம், தான் என்ன பேசுகிறோம்; அதன் பொருள் என்ன என்பதைக் கூட, உணரக்கூட முடியாத பதைப்பில் எதையோ புலம்பியிருப்பதைப் பார்க்கும்போது கொள்ளை கொடுத்த குப்பன் நினைக்கக்கூட கூசும் பாவத்தைச் செய்யக்கூடத்துணிந்து விடுவாரோ என்று அஞ்சவேண்டியிருக்கிறது.

பிளவுபடாத காங்கிரசின் இருபதாண்டுக்கால ஆட்சியில் அனுபவிக்க நேர்ந்த அவலங்களைக் கணக்கிட்டுப் பார்த்துத்தான் மக்கள் 1967 பொதுத் தேர்தலிலே காங்கிரஸ் கட்சிக்கு ஆளும் யோக்யதையே கிடையாது என்று ஒன்பதுக்குமேற்பட்ட மாநிலங்களிலே அந்தக் கட்சியைப் பூண்டற்றுப் போகுமாறு செய்திருக்கின்றனர்.

இது ஒரு விபத்து என்று அப்போது வருணித்தவர்கள்கூட 1971ல் நடந்த தேர்தலின் முடிவுக்குப் பிறகு, இது விபத்து அல்ல- மக்களது அறிவின் தெளிவு என்பதை உணர்ந்து தங்களைத் தாங்களே திருத்திக் கொண்டிருக்கவேண்டும்.

தாங்கள் எந்தக் காலத்திலும் திருந்தப் போவதில்லை என்று சூள் எடுத்துக் கொண்டு செயல்படுபவர்கள் போலவே காணப்படுகிறார்கள் இன்றும்,

சென்னை நகரம் போதுமான அளவுக்கு வளர்ச்சியடையவில்லையாம்! அதனால்—

> உடனடியாக மத்திய அரசு, சென்னை நகரத்தைத் தனது பகுதியாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

—என்று பேசி இருக்கிறார் எஸ். ஜி. விநாயகமூர்த்தி, சென்னை மாநகராட்சி மன்றக் கூட்டத்தில்.

சிரிக்கத் தோன்றினாலும், சிரித்துவிட்டு அமைதியடைய முடியாது இந்தப் பேச்சு மூலம்.

ஒருநாடு வளர்ச்சியடையவில்லை என்பதற்காக, எந்த ஒரு நாடும் தனது அண்டை நாட்டுக்கு அடிமைச் சீட்டு எழுதிக் கொடுத்து ஏற்றுக் கொண்டு விடாது.

அதிலும் மாநிலத்தின் ஒருபகுதி பின்தங்கி இருக்கிறது என்பதகாக, அந்தப் பகுதியின் ஆதிபத்திய உரிமையை பக்கத்து மாநிலத்துக்கு வாரிக் கொடுத்துவிட எந்த மாநிலமும் சம்மதிக்காது; அது போல் நினைத்துக்கூடப் பார்க்காது.

காங்கிரஸ்காரர்களது எண்ணத்தில் எவையெல்லாம் இடம் பற்றிக் கொண்டிருக்கின்றன என்பதற்கு இந்தச் செய்தி போதுமானதாகும்.

இந்திய நாடு, இன்னமும் முழு வளர்ச்சியடையவில்லை; இதன் வளர்ச்சிக்கு இதுவரையில் அமெரிக்காவிடம் பட்டிருக்கும் கடன் கோடிக் கணக்கிலிருக்கிறது. அதற்காக இந்தியாவை அமெரிக்காவுக்கு "தாரை வார்த்துக்" கொடுத்துவிட வேண்டும் என்று எவனாவது பேசினால், அவன் மூளைத் தெளிவுடன் இருக்கிறான் என்று எவரும் ஏற்கமாட்டார்கள். ஏற்காதது மட்டுமல்ல; மூளைத் தெளிவற்றவனாக இருந்தால்கூட கொஞ்சம் "பதம்" பார்த்து விடுவார்கள். அதுவும் அவசரச் சட்டம் பிரகடனப்படுத்தப் பட்டுள்ள இதுபோன்ற காலகட்டத்தில் எவனாவது அப்படிப் பேசினால் சட்டம்கூட வேடிக்கைப் பார்த்துக் கொண்டிராது. மேலே விழுந்து பிராண்டி விட்டுத்தான் மறுவேலை பார்க்கும்.

மத்திய அரசு என்பதற்கும், அமெரிக்கா என்பதற்கும் வேறுபாடு புரியாமலா நாம் இருக்கிறோம் எனக் கேட்பவர்களுக்கு நாம் கூறும் பதில், இரண்டும் வேறு வேறுதான் என்றாலும், ஒரு மாநிலத்தின் பகுதியை தானமாக இன்னொரு மாநிலத்துக்குத் தருவது என்ற பேச்சு முன்னதை ஒத்ததுதான் என்பதேயாகும். அடிமைப் புத்தியின் அற்பத்தனமான கருத்தூட்டமாகும் என்பதுதான்!

சுமார் 50 கோடி வரையில் வருவாய் கிடைக்கிறது என்று கூறிவிட்டு, அந்த வருவாய் முழுவதும் வளர்ச்சித் திட்டங்களுக்குச் செலவிடப்பட வேண்டுமானால்,

> சென்னையை, மத்திய அரசு ஏற்றுக் கொண்டுவிட வேண்டும்.

—என்று கூறியிருக்கிறார் அவர். சென்னையை விலை பேசுகிறாரா அவர் என்றும்கூட எண்ணவேண்டியிருக்கிறது.

தப்பித் தவறி மீண்டும் அந்தக் கொடியவர்களின் கையில் இந்த நாடு வந்து விடுமானால் நாட்டையே விலை பேசக் கூடத் துணிந்து விடுவார்களோ என்று எவருக்காவது ஐயம் எழுமானால், அது தவறானது என்பதற்கு நம்மால் ஆதாரம் தர முடியாது.

விநாயகமூர்த்தி போன்றவர்கள், பேசும் முன்பு, ஒருகணம் அந்தப் பேச்சு பற்றி எண்ணிப் பார்த்துவிட்டு சொற்களைக் கொட்டுவதுதான் அவர் இந்த நாட்டில் பிறந்தவர்; தாய் நாட்டின்மீது பற்றுடையவர் என்பதற்கான ஆதாரங்களாக இருக்கும்.

—திருவாரூர் முத்துராமன்.



டாக்டர் நாவலர் வாழ்க!

('பொன்னகர்' மாணிக்கம், எம்.எல்.ஏ.,)

நாவலரைப் பாடவேண்டும் நானென்று காத்திருந்த
நாள் இன்று வாய்த்த தெனக்கு
நாலரைக்கு எட்டுகின்ற நற்றமிழர் கோடிசார்பில்
நான்பாடும் வாயும் மணக்கும்
பாவலராய்ப் பைந்தமிழின் காவலராய்க் காலமெல்லாம்
பாதுகாத்து வருவ தாலே
பணிவான நெடுஞ்செழியன் கனிவான கவின்மொழியன்
பகுத்தறிவைத் தருவ தாலே
நாவலரைப் பாடவந்தேன் நல்லவர்க்கு நல்லவரை
நான்வணங்கிப் போற்று கின்றேன்
நாவன்மைச் சொல்லழகில் வல்லவர்க்கு வல்லவரை
நான்பாடிச் சாற்று கின்றேன்!
பாண்டியனும் நெடுஞ்செழியன் பைந்தமிழை வளர்த்தசெய்தி
பண்டைபுகழ் வரிகள் சொல்லும்
பகைகாட்டிப் புகவந்த படைவென்று விடைகண்ட
பழம்பெருமை சரிதம் வெல்லும்
பாண்டியனின் மறுபிறப்பாய்த் தோன்றியிங்கு அருஞ்சிறப்பாய்ப்
பணியாற்றும் அமைச்சர் கோனைப்
பாராளும் நற்றமிழால் பாராட்டுப் பெற்றுநிதம்
பலர்வாழ்த்தும் கல்வி மானைப்
பாண்டியனே அரசோச்சி ஆண்டிட்ட மதுரைநகர்
பாராட்டி அழைத்து அழகாய்ப்
பாரறிய டாக்டரெனும் பட்டத்தை ஆர்வமுடன்
படைத்ததுவே பல்கலைக் கழகம்!
தாய்மொழிக்கு இவர்செய்த தனிச்சேவை சொல்லுதற்கு
தமிழ்மொழியில் சொற்கள் இல்லை
தமிழகத்தில் பட்டிதொட்டி தமிழ்நெஞ்சில் முரசுகொட்டித்
தட்டியதற் குவமை இல்லை
ஓய்வின்றி ஒழிச்சலின்றி ஒண்டமிழின் புகழ்பரப்ப
ஊர்ஊராய் நாடிச் சென்று
ஊர்ந்துவரும் இந்திப்பாம் போடவைக்க ஆர்த்தெழுந்து
உணர்ச்சிபொங்க மேடை நின்று

தேய்ந்துவந்த தமிழ்ப்பற்றை ஆய்ந்துணர்ந்து தெளிந்துரைத்துத்
தென்னகத்தை நிமிர்த்த வேந்தன்
தெள்ளியராம் இவர்க்கின்று தெள்ளரிய தென்மதுரை
தேடிடாக்டர் பட்டம் ஈந்ததே!
அறிவிற்கு விருந்தாவார், அறியாமை எனும்நோய்க்கு
அருமருந்தும் ஆவார்; நல்ல
அரசியலில் வழிகாட்டி ஆகுமிவர் நேர்மைவழி
அமைத்திங்கு ஈவார்; உள்ளச்
செறிவிற்கு வித்திடுவார் சிந்தனைக்குப் புத்துயிரைச்
சேர்க்குமிவர் வியக்கும் வண்ணம்
சீர்மிகுந்த எழுத்தாற்றல் சேர்ந்தொழுக்கச் சீலராக
சீடர்களைப் பயக்கும் திண்ணம்
நெறியோடு அரசியலை நிமிர்ந்துநோக்கி நடைபோடும்
நெடுஞ்செழியன் கொண்ட திட்டம்
நிலையறிந்துத் திறமறிந்து நீங்காப்புகழ் மதுரைநகர்
நீட்டியதே டாக்டர் பட்டம்!
கடல்வாழும் நிலம்வாழும் காலமெல்லாம் வளம்வாழும்
கவிஞர்கள் எழுதுகின்ற
காவியங்கள் நயம்வாழும் கவின்சான்றோன் அண்ணாவின்
கழகஆட்சி என்றும் தங்க
மடல்வாழும் வரலாற்றில்! மங்காத புகழோடு
மண்ணுலகில் வாழும் வழியில்
மாதலைவர் கலைஞருடன் மறையாது ஓதுதமிழ்
மறைவாழ்தல் போன்று நாவலர்
உடல்வாழ்க நலம்வாழ்க உழைப்போங்கி நித்தநித்தம்
உயர்வோங்கி நீடு வாழ்க!
உலகாளும் தமிழ்போல உண்மைவழி டாக்டரது
உயிர்மேலும் வாழ்க வாழ்க!

★



ஒன்றுபட்டு நிற்கவேண்டும்!

கருத்தூரார் :

மகா பெரிய உபதேசம் செய்கிறாய், சமயம் கிடைக்கும்போதெல்லாம்-மொழி வெறி கூடாது, பிரதேசப் பித்து ஆகாது, காட்டுக் கூச்சல் கூடாது, கலகம் செய்வது தீது என்றெல்லாம்......

கதரூரார் :

என்னய்யா கொதிக்கிறீர்! நல்லது சொல்கிறேன் — நானென்ன குருவா உபதேசம் செய்ய? என் மனதுக்கு, என் மனதுக்கு மட்டுமல்ல, சராசரி அறிவுள்ள எவர் மனதுக்கும் நியாயம் என்று படுகிற நல்லவைகளை எடுத்துச் சொல்கிறேன்—இதற்கு ஏன் எரிந்துவிழுகிறீர். என்மீது?

கருத்தூரார் :

பேசுகிறது தப்பு என்று சொல்லவில்லை, ஐயா பெரியவரே! மொழி வெறி, பிரதேசப் பித்து இதெல்லாம் கூடாது என்று, இங்கு எங்களுக்குக் கூறுகிற வாய், உள்ளபடி மொழி வெறி தலைவிரித்தாடுகிற போது ஏன் தன்னாலே மூடிக்கொள்கிறது என்றுதான் கேட்கிறேன்.

கதரூரார் :

விளக்கம் சொல்லும்; புதிர் போட்டுப் பேசவேண்டாம்.

கருத்தூரார் :

தவறு எங்கு இருந்தாலும் கண்டிக்க வேண்டியதுதானே?

கதரூரார் :

சந்தேகமில்லாமல்! எங்கு இருந்தாலும் தவறு கண்டிக்கப்படத்தான் வேண்டும்.

கருத்தூரார் :

தவறு செய்பவர், யாராக இருந்தாலும் கண்டிக்க வேண்டியது தானே?

கதரூரார் :

தவறு செய்பவர், யாராக இருந்தாலும் கண்டிக்க வேண்டியது தானே?

கதரூரார் :

ஆமாம்—நிச்சயமாக! தவறு செய்பவர் யாராக இருந்தால் என்ன? மொழி வெறி, பிரதேசப் பித்து எவரிடம் கிளம்பினாலும், கண்டிக்க வேண்டியதுதான்.

டாக்டர் அறிஞர் அண்ணா

கருத்தூரார் :

கண்டிக்கத் தவறமாட்டீர் அல்லவா! இடம், மேலா, கீழா? ஆசாமி சாமான்யமா, கனமா? என்றெல்லாம் தயக்கம் எழக்கூடாதல்லவா?

கதரூரார் :

கூடவே கூடாது.

கருத்தூரார் :

அமைதியாக நியாயம் பேசுகிறீரே, நடைபெற்ற அக்ரமத்தைக் கண்டிக்க வாய் திறந்தீரா? துணிவு வந்ததா? ஏனய்யா. ஏதும் தெரியாதவர்போல, விழிக்கிறீர். பீகாரில் உத்திரப் பிரதேசத்தில், தலைவிரித்தாடிற்றே......

கதரூரார் :

ஓஹோ! அதைச் சொல்கிறீரா? பார்த்தேன், பத்திரிகையில்.

கருத்தூரார் :

பார்த்தீரா, பத்திரிகையில்! பசுபதி மடத்தில் பாராயணம், பட்டமளிப்பு விழாவில் சதிர்க் கச்சேரி, பட முதலாளியின் நன்கொடை என்று பல செய்திகளைப் பார்த்தது போல, இந்தச் செய்தியையும் பார்த்தீர் போலிருக்கிறது. எவ்வளவு சாவதானமாகச் சொல்கிறீர் ஐயா! பார்த்தேன் பத்திரிகையில் என்று. ஒரு மாநிலத்துக் கவர்னர், பாராளுமன்றச் சபாநாயகராக இருந்தவர், பாரிலே பல பகுதிகள் சென்று வந்தவர், அனந்தசயனம் ஐயங்கார், அவருக்கு 'இந்தி'யில் படிக்க முடியவில்லை, உரையை; அதற்கு மொழிவெறி காரணமாகக் காட்டுக் கூச்சல் கிளப்பி, அவரைப் பேசவிடாமல் தடுத்து விட்டனர்—அந்தப் பதவிக்கே ஒரு இழுக்கு ஏற்படத் தக்க விதமாக. பார்த்தேன் பத்திரிகை

இந்திரா சர்வாதிகாரப் போக்கில் நடக்கத் தொடங்கிவிட்டார் என்று வடநாட்டில் உள்ள சிண்டிகேட்டு பெருந் தலைவர்கள் குரல் கொடுக்கத் தொடங்கி இருக்கிறார்கள்.

இந்திராவோ மத்தியிலிருக்கிற கட்சியே மாநிலங்களிலும் ஆள வேண்டும் என்ற கருத்தை நாள் தோறும் வலியுறுத்திக்கொண்டே வருகிறார்.

இந்திமொழி விவகாரம் இன்னும் தீர்ந்தபாடில்லை - நமக்கு.

இந் நிலையில், இந்திராவின் போக்கு மாறுமானால் நிலைமை எப்படி இருக்கும் என்பதற்கு இந்த உரையாடல் ஒரு சான்று. 24-2-'63-இல் "ஊரார் உரையாடல்" என்ற தலைப்பில் திராவிட நாட்டில் எழுதப்பட்டது.

யில், என்று பேசுகிறீர், பதற வேண்டாமா, மனம். கிளம்ப வேண்டாமா, கண்டனக் கணை...

கதரூரார் :

கண்டிக்கத் தக்கதுதான்-பீகாரி லும் உத்தரப் பிரதேசத்திலும் நடைபெற்ற நிகழ்ச்சிகள்......

கருத்தூரார் :

நிகழ்ச்சிகள் மட்டும் அல்ல அய்யா அவை; நிலைமைகள்; நினைப்புகள். அந்த மொழி வெறி பிடித்தவர்களின் நினைப்பு, தமது தாய் மொழியான இந்திக்கு எல்லோரும் தலை வணங்கியாக வேண்டும் என்பது. அங்கு உள்ள நிலைமை, பிற மொழியாளர்களை, மட்டரகமான வர்கள் என்று திட்டவட்டமாகக் கருதச் செய்கிறது......

கதரூரார் :

அதெல்லாம் கூடாதுதான். யார் ஒப்புக்கொள்வார்கள் அந்த நடவடிக்கைகள் சரியென்று......

கருத்தூரார் :

இங்கு யாராவது, தமிழ் ஆட்சி மொழியாகவேண்டும்,பாடமொழியாக வேண்டும் என்று பணிவாக, கனிவாகக் கூறினாலும், கிளம்பி விடுகிறீர்கள் உபதேசம் செய்ய— மொழிவெறி கூடாது என்று. மிக மிக மோசமான முறையிலே மொழி வெறி வேறு இடங்களிலே தலைவிரித்தாடுகிறது. ஒரு கண்டன அறிக்கை உண்டா? தலைவர்கள் இந்தப் போக்கைத் தடுக்க முயற்சிக்கிறார்களா? ஏதோ, பத்திரிகைகளில், கண்டனம் வெளியிட்டார்கள், இதழாசிரியர்கள், நியாய உணர்ச்சியுடன். நாட்டின் தலைவர்கள், நாட்டுக்கு நல்லறிவு அருளவே பிறந்திருப்பதாகக் கருதிக் கொண்டிருக்கும் பெரியவர்கள் கண்டித்தார்களா? இல்லை! ஏன்? பாதிப்பேருக்குமேல், அதே மொழி வெறி கொண்டவர்கள், மற்றப் பாதியினர், இந்தி மொழியாளர்களிடம் வம்பிலே மாட்டிக்கொள்ளக் கூடாது என்று எண்ணும் பயம் பிடித்தவர்கள். உத்தரப் பிரதேசம்என்றாலே உச்சியிலிருந்து உள்ளங்கால்வரை ஆடுகிறது அவர்களில் சிலருக்கு......

கதரூரார் :

உத்தரப்பிரதேசமானால் என்ன, மத்தியப்பிரதேசமானால் என்ன...

கருத்தூரார் :

பேசலாமய்யா அது போல! ஆனால் நிலைமை அதுஅல்ல. நினைவிலிருக்கிறதா, டி. டி. கே. சொன்னது, முன்பு; பாராளுமன்றத்தில்.

கதரூரார் :

டி. டி. கே. என்ன சொன்னார் என்கிறீர். அவர் எது சொன்னாலும் தரமாகத்தான் இருக்கும்— என்ன சொன்னார்?

கருத்தூரார் :

அதைச் சொல்லட்டுமா? உத்தரப் பிரதேசத்தைப்பற்றி அவருக்கு உள்ள எரிச்சலைக் கொட்டிக் காட்டினார். இந்தியாவுக்குப் பாரதம் என்னும் ஒரு பெயர் உண்டல்லவா? அதை நையாண்டி செய்கிற முறையில் டி. டி. கே. சொன்னார், "இந்தியா—அதாவது பாரதம்—அதாவது உத்தரப் பிரதேசம்!" என்றார்.

கதரூரார் :

"ஹாஸ்யமாகச் சொல்லியிருக்கார், டி. டி. கே. நல்ல ரசிகர் ......தெரியுமே!

கருத்தூரார் :

அட உன் ஹாஸ்யமும் ரசனையும் கிடக்கட்டும் ஒருபுறம்! அவர் பேச்சிலே தொக்கி இருக்கிற அரசியல் பாடத்தைப் பாரும். இந்தியா என்றாலோ, பாரதம் என்றாலோ, உத்தரப் பிரதேசம் என்றாலோ, ஒரே பொருள்தான்— என்று கூறினார். உத்தரபிரதேசத்துக்கு உள்ள அளவற்ற செல்வாக்கை இடித்துக் காட்டினார். அந்த உத்தர பிரதேசத்தில், இந்தியில் பேச முடியாத கவர்னரை உட்கார வைத்து விட்டார்கள், கூச்சலிட்டு. மொழி வெறி அப்படித் தலைவிரித்து ஆடுகிறது அங்கெல்லாம். இங்கு நீங்கள், சாந்தி, சமரசம், சன்மார்க்கம் போதிக்கிறீர்கள்—எங்களுக்கு.

கதரூரார் :

பீகாரிலும் உத்தரப்பிரதேசத்திலும் நடந்தது ரசாபாசம்தான்.

கருத்தூரார் :

வெறி என்று அடித்துச் சொல்லுமே, ஐயா! ஏன் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் திண்டாடுகிறீர். அங்கு உள்ளவர்களைக் கண்டிப்பது என்றால் அவ்வளவு பயம்......

கதரூரார் :

பயம் என்று சொல்லிவிட முடியுமா...பயம் என்ன அவர்களிடம்!

கருத்தூரார் :

அப்போது 'பாசம்' என்று சொல்லவா, அதனை. பயமோ, பாசமோ, எதாகவோ இருக்கட்டும், அங்கு மொழி வெறி பிடித்து அலையும் போது, உம்மைப் போன்றவர்கள், கண்டிக்க முன்வருவது இல்லை. இங்கு, தமிழ்ப் பற்றுக் காட்டினாலே போதும், தொடை தட்டிக் கொண்டு கிளம்பி விடுகிறீர்கள், மொழி வெறி கூடாது, மிகத்தீது அறவே ஆகாது என்று முழக்கமிட. இப்போதாவது சொல்லுங்கள், இங்கு தமிழ்மொழி வளருவதற்காக வழி கூறுபவர்களை, பற்றுக் கொண்டவர்களை, மொழி வெறி கொண்டவர்கள் என்று தூற்றுவது, தவறுதானே?

கதரூரார் :

மொழி வெறி ஏற்பட்டுவிடக் கூடாதே என்ற கவலைதான் எமக்கெல்லாம், இப்போது தமிழ்ப்பற்று என் அளவுக்கு இருக்கலாம்-இருக்கிறது என்றே வைத்துக்கொள்வோம். ஆனால் இதை வளரவிட்டால், பற்று வெறியாகிவிடுமல்லவா......

கருத்தூரார் :

அடா அடா! என்ன புத்தி கூர்மை! என்ன நேர்த்தியான அறிவுத்திறன்! இங்கு இன்று உள்ளது பற்றுத்தான்—ஆனால் இது வெறி ஆகிவிடக்கூடுமே என்பதற்காக, இப்போதே கண்டிக்கிறோம்! என்கிறீர்கள். ஆனால் அங்கே வெறியே தலைவிரித்தாடுகிறது. பார்த்துக் கொண்டு வாய்மூடிக் கிடக்கிறீர்கள். பண்டித ஜவஹரும் மற்றவர்களும், இந்த மொழிவெறி கொண்டலைபவர்களை, ஆர்ப்பரிப்பவர்களைக் கண்டித்தால் என்ன? ஏன் கண்டிக்கவில்லை?

கதரூரார் :

கண்டிக்க வேண்டியதுதான்...... ஆனால், மொழிப் பற்றுக் காரணமாகத்தான் அவர்கள் கட்டுக்கு மீறிய சிலகாரியம் செய்துவிடுகிறார்கள் என்பதை மறந்துவிட முடியுமா......

கருத்தூரார் :

இது உலகம் உச்சிமேல் வைத்து மெச்சத்தக்க நியாயபுத்தி ஐயா! ஏனய்யா இப்படித் துணிந்து அக்ரமம் செய்கிறீர்கள்! அங்கே உள்ளவர்களின் மொழி வெறியை மொழிப் பற்று என்று கூறுகிறீர்கள், இங்கே உள்ளவர்களின் மொழிப் பற்றை மொழி வெறி என்று தூற்றுகிறீர்கள். நியாயமாக நடப்பதே இல்லை என்று முடிவு கட்டிக் கொண்டுதான் பொதுவாழ்வுத் துறையிலே இருக்கிறீர்களா!

கதரூரார் :

கட்டுக்கு அடங்கி இருக்கும் வரையில், மொழிப் பற்று...கட்டுக்கு மீறிப் போகும்போது மொழி வெறி......

கருத்தூரார் :

இந்த இலக்கணம் எல்லோருக்கும் தெரியும். இங்கு மொழிப் பற்றுக் காரணமாக, தண்டல் நாயகம் போன்ற தூய தமிழ்ச் சொற்களைப் புகுத்தினல், மொழிப் பித்துக் கூடாது என்று பேசவும் எழுதவும் மேதாவிகள் புறப்படுகிறுர்கள். அங்கு மொழி வெறி காரணமாக, கவர்னர்கள் உரை நிகழ்த்த முடியாதபடி கலாம் விளைவிக்கிறுர்கள் இந்திக்காரர்கள்; 'பற்று' என்று கூறி, மழுப்புகிறீர்கள் அந்தப் போக்குக் கண்டு. காரணம்? பயம்!

கதரூரார் :

திரும்பத் திரும்பப் பயம், பயம் என்று பேசிக் கேலி செய்யவேண்டாம் ஏன் ஏற்படப் போகிறது? பயந்த சுபாவக்காரராக நாங்கள் இருந்தால், இங்கு தமிழ்ப் பற்று என்ற காரணம் காட்டிக்கொண்டு, உந்துவண்டி, பொறியர், காவலர் இல்லம், தண்டல் நாயகம் என்றெல்லாம், புதுப் புதுச் சொற்களைப் புகுத்துபவர்களைக் கண்டித்திருப்போமா?

கருத்தூரார் :

இங்கு உள்ளவர்களைக் கண்டிப்பீர்கள். பயமின்றி! அதுதான் தெரியுமே. ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி என்பார்கள் அதுபோல் இது இந்தத் தமிழ் மக்கள் நம்மை ஏதும் செய்யமாட்டார்கள்; எதையும் தாங்கிக் கொள்வார்கள்; எவ்வளவும் கண்டிக்கலாம் என்ற தைரியம். இன்னு செய்தாரை இனிய முறையில் நடத்தச் சொல்லி வள்ளுவர் கூறி விட்டாரே—அது வேறு உங்களுக்குச் சாதகமாகி விட்டது. ஆகவே பயமின்றித் தூற்றுகிறீர்கள், தமிழ்ப் பற்றுக் கொண்டவர்களை இங்கு. அங்கே முடியாதே!!

கதரூரார் :

அங்கு மட்டும் என்னவாம்? என்ன செய்து விடுவார்கள், அவர்கள் மட்டும்?

கருத்தூரார் :

கவர்னர்களே படாத பாடு பட்டார்களே, அந்த மொழி வெறியாளர்களிடம் சிக்கி.

கதரூரார் :

அதைச் சொல்கிறீரா — கூச்சலிட்டார்களே, அதை?

கருத்தூரார் ;

ஏன், அது போதாது என்கிறீரா? கூச்சல்தானே போட்டார்கள், குத்து வெட்டு இல்லையே என்கிறீரா? அதுவும் நடக்கும். அவர்கள் விரும்பினுல். பார்த்தோமல்லவா, சென்ற ஆண்டு மொழி வெறி காரணமாக, அசாமியருக்கும், வங்காளிகளுக்கும் நடந்த குத்து வெட்டு, கொலை கொள்ளை போன்ற கொடுமைகளை, எதெதற்கோ, தாவிக் குதித்துக் கண்டிக்கிற உம்போன்றவர்கள் காட்டுமிராண்டித்தனமாகச் செயல்கள் நடந்தபோது என்ன செய்தீர்கள்? பொறுமை! பொறுமை! என்று உபதேசம் செய்தீர்கள். கண்டிக்கத் துணிவு இல்லை. இங்கு சுவாமி வேதாசலம் மறைமலை அடிகள் என்று ஆகிவிட்டது கண்டு அண்டம் அதிரக் கூச்சலிட்டுக் கண்டித்தீர்கள். இங்கு தமிழ்ப் பற்று உள்ளவர்கள், கட்டுக்கு மீறி நடப்பது இல்லை — ஆனுல் அவர்களைத்தான் கண்டிக்கிறீர்கள், மிரட்டுகிறீர்கள், மொழிப் பற்றுக் காரணமாக இங்கு, என்றுவது, ஒரு சிறு கலகம் எழுந்ததா? அங்கு. எந்தத் தகராறு கிளம்பட்டும், உடனே கொள்ளை கொலை, தீயிடல், இவ்வளவும் நடக்கிறது. அங்கு உள்ள தலைவர்கள் கலகம் செய்பவர்களை, வேண்டிக் கேட்டுக்கொள்கிறு கள், கெஞ்சுகிறுர்கள், கொஞ்சுகிறுர்கள், சமரசம் பேசுகிறுர்கள்! இங்கு? ஒரு சிறு கலகம் கண்டால் போதும், துப்பாக்கி பேசுகிறது!!

கதரூரார் :

சட்டம் வேலை செய்கிறது, அமைதி காத்திட......

கருத்தூரார் :

ஆமாம்! இங்கு! அங்கு? இரயிலை நிறுத்திக் கொள்ளையடிக்கிறுர்கள்; சட்டம், மெல்ல மெல்ல, தள்ளாடித் தள்ளாடி நடந்து வருகிறது, குற்றவாளியைத் தேடிக்கொண்டு ......இப்போது நெருக்கடி நிலைமை பகைவன் எல்லையில் நிற்கிறுன் மோப்பம் பிடித்தபடி. இந்த நேரத்தில், இரயிலில் புகுந்து கலகம் செய்ய, கொள்ளை அடிக்க மனம் வருகிறது, சிலருக்கு...

கதரூரார் :

அது தவறுதான்! எப்படிப்பட்ட சமயத்தில் இந்த நடவடிக்கை...

கருத்தூரார் :

இங்கு, போர் ஆதரவு முயற்சியில் அனைவரும் ஒன்றுபட்டு ஈடுபட வேண்டும் என்ற நோக்கத்துக்காக, கட்சிகளுக்குள்ளே மனக்கசப்பு இருக்கக்கூடாது என்று, தி. மு, கழகத்தினர், கவர்னர் உரை நிகழ்த்தும்போது, விழாவில் கலந்து இருந்தனர் — கண்ணியத்துடன். ஆனுல் பீகாரிலும் உத்தரப் பிரதேசத்திலும், இந்தி மொழியல்லாத மொழிகள் பேசுவோர்களின் மனதில் கசப்புணர்ச்சி ஏற்படும்படி, மொழி வெறி காட்டினர் இந்தி மொழியினர். நீங்கள் அதைக் கண்டிக்கவும் துணிவு கொள்ளவில்லை, தி. மு. கழகம், கட்சிகளிடையே கசப்புணர்ச்சி ஏற்படக்கூடாது என்பதற்காக, கவர்னர் உரை நிகழ்ச்சியில் கலந்து கொண்டதற்கு ஒரு பாராட்டும் தெரிவிக்கவில்லை, நல்லதைப் பாராட்டும் நற்பண்பும் காணும், தீயதைக் கண்டிக்கும் துணிவும் இல்லை...

நநரூரார் :

தி. மு. கழகப் போக்கிலே திருப்தியும் மகிழ்ச்சியும் தெரிவித்தாரே மந்திரி பக்தவத்சலம்...

கருந்துரரர் ;

பார்த்தேன் பத்திரிகையில்! ஆனுல் அதிலேகூட, என்ன மனப்போக்குக் காட்டினுர் அமைச்சர், நான் சென்ற ஆண்டே புத்திமதி கூறினேன் என்று சுட்டிக் காட்டித்

தி. மு. கழகம் ஏதோ, ஒரு தவறு செய்து வந்ததுபோலவும் இப்போது அதைத் திருத்திக்கொண்டதுபோலவும் பேசினார்.

கதரூரார் :

ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமாகப் பேசுவார்கள் — இயல்பு அது. அதற்கெல்லாம், புட்டுப் புட்டுப் பொருள் காண முனையலாமா?

கருத்தூரார் :

அப்படிப் பொருள் காண முனையவுமில்லை — ஒவ்வொன்றையும் புட்டுப் புட்டுக் காட்டவுமில்லை, அப்படிச் செய்வதானால், இராமரிடம் காண்டீபம் இருந்ததாகக் கூட ஒரு காங்கிரஸ்காரர் பேசினார். அதை எடுத்து வைத்துக்கொண்டு கூடத்தான் வேடிக்கை பேசலாம். பேசவில்லையே! ஒரு அமைச்சர், நல்லது நடக்கும்போது நாலு நல்ல வார்த்தை சொல்லும் பண்பு கொள்ள வேண்டுமே என்பதைக் காட்டத்தான் அமைச்சர் பக்தவத்சலம் அவர்களின் பேச்சைக் குறித்துக் கூறினேன்.

கதரூரார் :

நான்கூடப் பார்த்தேன் மந்திரி பக்தவத்சலம் அவர்கள் தி. மு. கழகத்துக்கு ஆதரவு காட்டினதாக...

கருத்தூரார் :

இப்படித்தான் இட்டுக் கட்டிப் பேசி எரிச்சலை மூட்டுகிறார்கள்...

கதரூரார் :

இட்டுக்கட்டு என்ன இருக்கிறது இதிலே. மேயர், தி. மு. கழகத்தார் தானே இப்போது. அது மந்திரியார் ஏற்பாடுதானே.

கருத்தூரார் :

ஏற்பாடு என்று சொன்னால், ஆமாம் என்று ஒப்புக்கொள்ளலாம். ஆனால் சில பேர். அவருடைய தயவால், தி. மு. க. மேயர் வந்ததாகப் பேசி, அதன் மூலம் தங்கள் மன அரிப்பு அடங்க வழி தேடிக்கொண்டார்கள்—முறையா அது? இதிலே தயவுஎன்ன வேண்டி இருக்கிறது, தயவு போட்டி, புகைச்சல் வேண்டாம் என்றார் அமைச்சர். தி. மு. கழகம் ஒரு பெரியவர் யோசனை சொல்கிறாரே, அதுவும் நியாயமான யோசனையாக இருக்கிறதே என்று எண்ணி, விளக்கம் கேட்டது; தந்தார்; ஏற்பாடு நடைபெற்றது. தி. மு. கழகம் மேயர் பதவி கிடைக்குமா கிடைக்குமா என்று ஏங்கித் தவித்துக்கொண்டு இருந்தது போலவும், கிடைப்பதற்கு வழி இல்லாமல் போனது போலவும், அமைச்சர் பக்தவத்சலம், பெரிய மனது வைத்துத் தயவு காட்டியது போலவும், அழுகிற குழந்தைக்குத் தின்பண்டம் கொடுப்பதுபோல, தி. மு. கழகத்துக்கு மேயர் பதவி வாங்கிக் கொடுத்தது போலவும்...

கதரூரார் :

இப்படி எல்லாமா பேசினார்கள் —ஒன்றை ஒன்பதாக்கிப் பேசலாமா?

கருத்தூரார் :

நான் பேசுகிறேனா, ஒன்றை ஒன்பது ஆக்கி? பேசினார்களய்யா, இதுபோல, தி. மு. கழகம், போர் ஆதரவு முயற்சிக்கு ஒத்துழைப்பது கண்டு, நல்ல பிள்ளைகளாகி விட்டார்கள் என்று மகிழ்ந்து, பரிசு கொடுப்பதுபோல, பக்தவத்சலம், மேயர் பதவியை வாங்கிக் கொடுத்தாராம். நாடு பாதுகாக்கப்பட வேண்டும். அந்நியன் விரட்டப்பட வேண்டும், பகைவன் முறியடிக்கப்பட வேண்டும் என்பதற்காக தி. மு. க. ஒத்துழைப்புத் தருகிறது. அமைச்சர் பக்தவத்சலத்துக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? இந்தியா என்ன அமைச்சருடைய, ஜெமீனா! நம்முடைய ஜெமீனுக்கு வர இருந்த ஆபத்தைத் தடுக்க தி. மு. க. ஒத்துழைக்கிறதே என்பதுபற்றி எண்ணி, மகிழ்ந்து, தின்பண்டம் தர...

கதரூரார் :

சும்மா ஒரு பேச்சுக்கு யாரோ சொன்னால், அதற்காக இவ்வளவு கோபமா கொள்வது?

கருத்தூரார் :

கோபம் இல்லை! சில பேர்களுக்குத் தோன்றுகிற எண்ணத்தைப் பார்க்கும்போது, எரிச்சல் ஏற்படவில்லையா? அதற்காகச் சொன்னேன். தி. மு. கழகத்துக்குத் தின்பண்டம் கொடுத்தாராம்!! எதிர்க்கட்சியான தி. மு கழகத்துக்கே தின்பண்டம் கொடுப்பவர் அமைச்சர் பக்தவத்சலம் என்றால், அவருடைய சொந்தக் கட்சிக்காரரர் வாய் சுவைக்க என்னென்ன தின்பண்டம் கொடுத்திருப்பார், என்னென்ன சுவைத்தீர்கள், எப்படி இருந்தது சுவை என்று, சின்னத்தனமாகப் பேசுபவர்களைப்பார்த்து தி. மு. க. கேட்குமா, கேட்காதா...

கதரூரார் :

பெரிய பிரச்சினையாக்கிவிடுகிறீர் சின்ன விஷயத்தை......

கருத்தூரார் :

நான் ஆக்கவில்லை. சின்ன விஷயத்தைப் பெரிய பிரச்சினையாக்கினார்கள், காங்கிரலுள்ள சிலர். சட்டசபையிலே தி மு க. உறுப்பினர், தடைச்சட்டம்பற்றிப் பேசும்போது, அது எமன் வீசும் பாசக் கயிறு போன்றது! அந்தப் பாசக் கயிறு வீசப்படுவதால், தி.மு. கழகம் இறந்துபடுமா அல்லது மார்க்கண்டேயன்போலச் சிரஞ்சீவியாக இருக்குமா என்பது இனித்தான் தெரியும் என்று பேசினார்......

கதரூரார் :

படித்தேன் பத்திரிகையில்...... முல்லை வடிவேலு எம்.எல்.ஏ. பேசினார் அப்படி, இல்லையா......?

கருத்தூரார் .

ஆமாம்! இதற்குப் பதில் கூறினார் காங்கிரசார் ஒருவர். என்ன தெரியுமா? பாசக் கயிற்றிலிருந்து, தி.மு. கழகம் தப்பவேண்டுமானால், மார்க்கண்டேயன் சிவலிங்கத்தைக் கட்டிப்பிடித்துக்கொண்டதுபோல மந்திரி பக்தவத்சலம் அவர்களைக் கட்டிப் பிடித்துக் கொண்டால் போதும், என்றார்.

கதரூரார் :

ஆமாம், அதையும் படித்தேன் பத்திரிகையில். இதிலென்ன தவறு?

கருத்தூரார் :

தவறுஇல்லை. ஆனால் நையாண்டி அல்லவா இது? தி. மு. கழகம், அமைச்சர் பக்தவத்சலத்தின் தயவால்தான் பிழைக்கமுடியும் என்று குத்திக்காட்டும் பேச்சல்லவா?

கதரூரார் :

அதெல்லாம் இல்லையப்பா. கழக எம். எல். ஏ. மார்க்கண்டேயன் கதை சொன்னார்; காங்கிரஸ் எம். எல். ஏ. அந்தக் கதையின் இன்னொரு பகுதியைச் சொன்னார். கேலியுமில்லை, கிண்டலுமில்லை ...

கருத்தூரார் :
அப்படியானுல், ஐயா! அதே கதையைத் தொடர்ந்து பேசி, அமைச்சர் பக்தவத்சலத்தைக் கட்டிப் பிடித்துக்கொண்டால் பிழைத்திடலாம் என்று அன்பர் கூறுகிருர், மார்க்கண்டேயன் சிவலிங்கத்தைக் கட்டிப் பிடித்துக்கொண்ட கதையையும் காட்டினுர். கதையின்படி, மார்க்கண்டேயன் சிவலிங்கத்தைக் கட்டிப் பிடித்ததும் என்ன நடந்தது என்ருல், இலிங்கம் வெடித்து, உள்ளே இருந்து பரமசிவன் வெளி வந்து. பாசக்கயிறு வீசிய எமனை எட்டிக் காலால் உதைத்தார்; அதன்படி நடப்பதானுல், அமைச்சர் பக்தவத்சலம், டில்லி சர்க்காரின் உத்தரவை எட்டிக் காலால் உதைக்கவேண்டும், உதைப்பாரா? என்று ஒரு கழகத் தோழர் எடுத்துக் கூறினுல்......

கதரூரார் : உன்னேடு பேச என்னுல் ஆகாது அப்பனே! நீ. பெரிய இடத்து விவகாரத்தை எல்லாம் எடுத்துக் கொள்கிருய். வம்பிலே மாட்டிவிடுவாய்.

கருத்தூரார் :
இதுதான் உமதுபோக்கு. பெரிய இடம் எது செய்தாலும் எதிர்த்துப் பேச வாய் இருக்காது! சாமான்யர்கள் கிடைத்தால், சக்கைப் போடு போடுவீர்கள். அதனுல்தான், பீகாரிலும். உத்தரப் பிரதேசத்திலும் இந்தி மொழி வெறி அப்படித் தலை விரித்து ஆடிற்று! கேட்பார் இல்லை; கண்டிப்பார் இல்லை.

கதரூரார் :
நான் வருகிறேன் அப்பா! எனக்கு வேறு வேலை இருக்கிறது.

கருத்தூரார் :
புறப்படும், புறப்படும், என்ன வேலையாகக் கிளம்புவீர்; தெரியாதா! தி, மு. கழகத்தை ஏசிப் பேசி, பெரிய இடங்களை மகிழச் செய்யும் வேலைக்குத்தான் போய்ப் பேசும்! இந்த நெருக்கடி நிலைமை தீருகிறவரையில், கொண்டாட்டம்தான், உம் போன்ருருக்கு. ஏனெனில், தி. மு. கழகம், பிரச்சினைகளைக் கிளறி, விவாதம் ஏற்படுத்தி, மனக்கசப்பு உண்டாக்க இது அல்ல நேரம், பகைவன் இன்னமும் எல்லையில் நிற்கிருன், இப்போது ஒன்றுபட்ட நோக்கம், தோழமை உணர்ச்சி. இருக்க வேண்டும் என்று கருதுகிறது யார் என்ன ஏசினுலும் பொறுத்துக் கொள்கிறது! உம்போன்ருர் பாடு கொண்டாட்டம்! நடக்கட்டும், நடக்கட்டும், நாக்கிலே உள்ள ஈரம் உலருமட்டும் பேசுங்கள்; நெஞ்சிலே உள்ள குரோதம் தீருமட்டும் பேசுங்கள். தி மு. கழகம் எத்தனையோ ஏசல்களைத் தாங்கிக் கொண்டிருக்கிறது; இதனையும் தாங்கிக் கொள்ளும்.

[இதழூரார் வருகிருர், பேச்சைக் கேட்டுக்கொண்டே]

இதழூரார் : எப்படிஐயா தாங்கிக் கொள்ள முடியும். இப்படிப்பட்ட கேவலத்தை. கொடுமையை......

கதரூரார் : எதைப்பற்றி இப்படி பேசுகிறீர்—புரியவில்லையே...

இதழூரார் : டில்லி பாராளுமன்றத்திலே நடந்ததுபற்றித்தானே நீங்கள் இருவரும் பேசிக்கொண்டிருந்தீர்கள்?

கதரூரார் : இல்லையே! பார்லிமெண்ட் விஷயமாக பேசவில்லையே

கருத்தூரார் : பாராளுமன்றத்தில் என்ன நடந்தது?

இதழூரார் : ஓ! உங்களுக்கு அந்த விஷயமே தெரியாதா? குடிஅரசுத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் பேருரை நிகழ்த்தினுர். அவர் அந்த உரையை இந்திபிலே நிகழ்த்தவில்லை என்பதற்காக, வெளிநடப்புச் செய்தார்கள்...

கதரூரார் :
ஜனுதிபதி பேசும்போதா, வெளிநடப்பு? அக்ரமமாக இருக்கிறதே! அநியாயமாக இருக்கிறதே !

கருத்தூரார் : வெளிநடப்புச் செய்தவர்கள் எந்தக் கட்சிக்காரர்கள்?

கதரூரார் : எந்தக் கட்சிக்காரராக இருந்தால் என்னய்யா? ஜனுதிபதி, கட்சிகளுக்கெல்லாம் அப்பாற்பட்டவர்— மேம்பட்டவர் அல்லவா...

கருத்தூரார் : எல்லாக் கட்சிகளுக்கும் பொதுவானவர் குடி அரசுத் தலைவர்...

இதழூரார் : சோஷியலிஸ்டுகள் தான் வெளி நடப்புச் செய்தார்கள். இத்தனைக்கும் டாக்டர் இராதாகிருஷ்ணனே சொன்னுர், இந்தி மொழியிலேயும் என் பேருரை படிக்கப்படும் என்று

கதரூரார் : சொல்லியும் கேட்கவில்லை. என்னய்யா அக்ரமம்.

கருத்தூரார் : முக்கியமான விஷயத்தைக் கவனித்துப் பாருமய்யா! கதரூராரே சோஷியலிஸ்டுகள் என்ருல், [illegible] பற்றி அல்லவா அதிகமான அக்கறை காட்ட வேண்டும்? இவர்களுடைய அக்கறை எதிலே சென்றது கவனித்தீரா? இந்தி மொழிமீது!

கதரூரார் : இந்தி மொழிமீது அக்கறை இருக்கட்டும்; அதற்காக பார்லிமெண்ட்டின் புனிதமான சம்பிரதாயத்தையா பாழாக்குவது. ஜனுதிபதி என்ன, இந்தி மொழிக்கு விரோதியா? அவரை அவமதிப்பதுபோல, வெளிநடப்பு நடத்துவது முறையா...?

இதழூரார் : இப்போதுதான் டெலிபோன் மூலமாகச் செய்தி கிடைத்தது எனக்கு. பதறிவிட்டேன், போங்களேன்...

கதரூரார் : கருத்தூராரே! நீர் சொன்னது முற்றிலும் உண்மை. இப்படிப்பட்ட போக்கைக் கண்டிப்பாக அனுமதிக்கக் கூடாது.

கருத்தூரார் : பீகாரில் நடந்த போதே, கண்டனம் கிளம்பி இருந்தால், குடி அரசுத் தலைவருக்கு மரியாதை காட்டாத போக்கு, கிளம்பி இருக்குமா?

கதரூரார் :
உண்மைதான், கருத்தூராரே! நமக்குள் ஆயிரத்தெட்டு விஷயங்களிலே அபிப்பிராய பேதம் இருந்தாலும், இந்த இந்தி மொழி ஆதிக்க வெறி பிடித்தவர்களை எதிர்த்து நிற்பதிலே மட்டும், நாம் ஒன்றுபட்டு நிற்க வேண்டும். குடிஅரசுத் தலைவரையே துச்சமென்று கருதும் அளவுக்கு நடந்துகொண்டிருக்கிருர்கள்.

இதழூரார் :
பண்டிதநேருவுக்குக்கூட, ரொம்பக் கோபமாம்—மனவருத்தமாம்.

கதரூரார் :
இருக்காதா என்ன? ஆனுல் பண்டிதர் இந்தப் போக்கினரை அவ்வப்போது அடக்கி இருக்கவேண்டும்—அதைத்தான் கருத்தூரார் சொல்லிக் கொண்டிருந்தார் நீங்கள் வருகிறபோது.

இதழூரார் :
நாமெல்லாம் ஒன்ருகி, இது பற்றி, நல்லறிவு பிறக்கும்படிச் செய்யவேண்டும்:

கருத்தூரார் :
இந்த மனப்பான்மை நிலைத்திருக்குமானுல் நமது உரிமைகள் பாழ்படாது. நிச்சயமாக.

★

இன்றைக்கு மாத்திரம்?

அன்புள்ள நண்பா!

நீண்ட இடைவெளிக்குப் பிறகு, எப்படியோ இந்தக் கிழமை, உன்னுடன் கடிதத் தொடர்பு கொள்ளும் மன நிலை வாய்த்தது குறித்து எனக்கு ஏற்படும் மகிழ்ச்சியைப் பங்கிட்டுக்கொள்ள தடையெதுவும் இடையிலில்லை என்பதை உணர்கிறேன்.

எபபடி முடிந்தது இது? என்று நீ கேட்கிறாயா? முடியவே முடியாத ஒன்றுதான்! ஆனாலும் முடிந்திருக்கிறது இந்தக் கிழமை. எப்படி தெரியுமா?

குமுதம் இதழைப் பற்றித்தான் நீ நன்கு தெரிந்து வைத்துக்கொண்டிருக்கிறாயே! அந்த இதழின் 9—3—'72ஆம் நாளைய வெளியீட்டின் அட்டையின் பின்பக்கம், "இன்றைக்கு மாத்திரம்" என்ற தலைப்பில் சில நல்ல கருத்துக்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

திரும்பத் திரும்பப் படித்தேன்! வாய் வலிக்கும் மட்டும் படித்துக் களைத்தேன்! அந்தக் களைப்புக்கிடையே கண்களை மூடிக்கொண்டு, நாடு முழுவதையும் ஒரு சுற்றுச் சுற்றி வந்தேன்.

> "மத்தியிலே ஆளும் கட்சிதான், மாநிலங்களிலும் ஆள வேண்டும். அப்போதுதான் தடைகள் எதுவும் இன்றி நாட்டுக்கு நல்ல திட்டங்களைச் செயல்படுத்த முடியும்"

—என்று இந்தியப் பிரதமர் ஒரு பக்கம் முழக்கம் எழுப்பிக்கொண்டே ஒரு பொதுத் தேர்தலை நடத்திக் கொண்டிருக்கிற ஒரு காட்சி கண்ணுக்குத் தெரிகிறது.

> "காங்கிரஸ் கட்சி ஒன்றினால் மட்டுமே எல்லா மாநிலங்களிலும் நிலையான அரசுகளை அமைக்கமுடியும் என்று சொல்வது சரியான வாதமல்ல; திராவிட முன்னேற்றக் கழகத்தின்கீழ் தமிழ் நாடு நிலையான அரசையும், முன்னேற்றத்தையும் அனுபவித்து வருகிறது"

—என்று அமிர்தபஜார் பத்திரிகா என்ற ஆங்கில நாளேட்டின் தலையங்கம் ஒரு பக்கம் கவனத்துக்கு வருகிறது.

> "நான் ஏன் வெளி மாநிலங்களுக்குச் செல்ல வேண்டும்? இங்கேயே — தமிழகத்திலேயே இருந்துகொண்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியை ஒழிக்கப் பாடுபடப்போகிறேன்"

—என்று வாய் [illegible] நாள் தோறும் [illegible] உடுத்து வரும் காமராசர், தன்னைத் தேர்தல் பிரசாரத்துக்குப் பிற மாநிலங்கள் ஒரு மரியாதைக்குக்கூட அழைக்கவில்லையே என்ற அங்கலாய்ப்பை மூடி மறைக்கவும், தான் இந்திரா காங்கிரசுக்கு எதிராகப் போய்விடவில்லை என்று நிரூபித்துச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளவும் அரும் பாடுபட்டு, பேயாய் அலைந்து கொண்டிருக்கும் காமராசர் ஒரு பக்கம் கவனத்துக்கு வருகிறார்!

> பொய்யான—பரபரப்பான—கலகமூட்டத் தக்க செய்திகளை அன்றாடம் பெரிய கடித்த எழுத்துக்களால் பிரசுரித்துவிட்டு, எதிரொலியாக நாட்டின் எந்தவொரு மூலையிலிருந்தாவது குருதிகூட அல்ல—சீழாவது ஒழுகாதா? நக்கிக் குடிக்க முடியாதா?

—என்ற மன உளைச்சலைக் காட்டிக் கொண்டிருக்கும் தேசிய ஏடுகள் என்று தமக்குத் தாமே கம்பட்டமடித்துக் கொண்டிருக்கும் நவசக்தி, நாத்திகம் முதலான ஏடுகள் ஒரு பக்கம் எண்ணத்தில் பதிகின்றன!

> திராவிட முன்னேற்றக் கழக அரசை விட்டால், வேறு எந்த அரசிடமும் இவ்வளவு பெரிய அனுகூலங்களைப் பெற முடியாது; வாய்ப்பிருக்கும்போதே கேட்டுப் பெற்றுக்கொண்டு விட வேண்டும்; தப்பித் தவறி வேறு எந்த அரசாவது வந்துவிட்டால் தமது குரல் தமக்கே எட்டக்கூட கூச்சல் கிளப்ப முடியாது.

—என்று நம்பி, நாடெங்கும் போராட்டக் குரல் கொடுத்துக் கொண்டிருக்கும் பல தரப்பட்ட அரசு ஊழியர்களும், தனியார் நிறுவன ஊழியர்களும் அவர்களது செயற்பாடுகள், திட்டங்கள் ஆகியவையும் கருத்தினைக் கவர்ந்து கொள்கின்றன இன்னொர் பக்கம்!

இவற்றுக்கிடையே நண்பா, கண்ணைத் திறந்து மறுபடியும் குமுதம் இதழின் கடைசி அட்டைப் பக்கத்தைப் படிக்கிறேன்! சிரிப்பு வந்துவிடுகிறது! வாய்விட்டுச் சிரிக்க வேண்டியேற்பட்டு விடுகிறது. வாய்விட்டுச் சிரிக்கும்போது, இதயத்தின் சுமைகள் வலுநன்றி எளிதாகிவிடும் என்று அடிக்கடி கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் எடுத்துக் காட்டுவாரே, அது உண்மைதான் என்ற நிலை பிறந்துவிடுகிறது எனக்கு!

அரசியலில் எத்தனை எத்தனையோ தகிடு தத்தங்கள் மேற்கொள்ளப்படலாம்; அவற்றுக்கு ராஜ தந்திரம் என்றுகூட பெயரிடப்படலாம்! போர்க்களத்தில் எதிரிகளது மண்டைகளை, கைகளை, கால்

களை, குடல்களை யெல்லாம்கூட வெட்டி யெடுத்து ஆர்ப்பாட்டம் நடத்தும் கோலாகலத்துக்கு வெற்றி; வீரத்தின் விளக்கம்! பேராண்மை என்றெல்லாம் பெயர்கள் சூட்டப்பட்டு அனுமதிக்கப்படுகிறதே அது போல!

சரித்திரத்தைப் படைப்பது சர்வாதிகாரம்தான் என்று ஒருவர் உயர்ந்த இடத்திலே இருந்து கருத்து மழை பொழிந்து கொண்டிருக்கும் வேளையிலேயே, அந்த சர்வாதிகார சக்தியின்—சுவாலையின் உக்கிரம் தாங்கமாட்டாது கருகிப் பொசுங்கிப் போனவர்கள், சர்வாதிகாரத்தின் கொடுமைகள், விளைவுகள் பற்றித் தத்துவப் பிழிவுகளாகப் பொழிந்து கொண்டிருக்கிறார்கள்!

உயர்ந்த இடத்திலே இருந்து பிழையான கருத்துக்களைக் கொடுக்கிறார்கள்; தாழ்ந்துவிட்ட இடத்துக்கு வந்து சரியான—உண்மையான—தேவையான கருத்துக்களை எடுத்துக் காட்டுகிறார்கள்.

காலம், உயர்ந்த இடத்துக்குத் தரும் மதிப்பை, தாழ்ந்த இடத்துக்குத் தர மறுத்து விடுகிறது, விளைவுகள் விபரீதமாகிக் கொண்டிருக்கின்ற நாட்டின் ஒரு பக்கத்தில்!

துணைக் கண்டம் முழுவதும் தனது கட்சியே ஆளும் கட்சியாக இருக்கவேண்டும் என்று பிரதமர் கொக்கரிக்கிறார் ஒரு பக்கத்தில்!

தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்து ஆட்சியை ஒழித்துவிட்டுத்தான் பாயில் படுப்பேன் என்று கூறி அதுவரை மெத்தையிலே உருண்டு கொண்டிருக்கிறார் பாவம் காமராசர் ஒரு பக்கம்!



ஏடுகள், இதழ்கள் என்பவைகளிலே சில நல்ல சமயமடா இதை நழுவ விடுவாயோ என்று தங்கள் தங்கள் விற்பனைக்குச் சரியான களமாக்கிக் கொள்கின்றன சிலவகைச் செய்திகளுக்கு!

மொத்தத்தில் நாட்டிலே மகாப் பெரிய பிரளயம் ஒன்று ஏற்பட்டுவிட வேண்டும் என்று ஏற்பட்டுவிட்டிருக்கும் மன அரிப்பு பற்றிப் புரிந்துகொள்ள முடிகிறது.

அதனைப் புரிந்துகொண்டு, குமுதம் கூறும் "இன்றைக்கு மாத்திரம்" என்ற கருத்துக்களின்மீது மறுபடியும் கண்ணோட்டம் செலுத்தினால் எப்படி இருக்கும்? நண்பா!

(1) இன்றைக்கு மாத்திரம் மகிழ்ச்சியோடு இருப்பேன்;

(2) இன்றைக்கு மாத்திரம் எதிலுமே வீம்பு பிடிக்காமல் இருப்பேன்;

(3) இன்றைக்கு மாத்திரம் என் மனம் புண்படுகிற மாதிரி ஏதேனும் நடந்திருந்தால், அதை யாரிடமும் காட்டிக் கொள்ள மாட்டேன்;

(4) இன்றைக்கு மாத்திரம், மெல்லப் பேசுவேன்; மரியாதையுடன நடந்து கொள்வேன்;

(5) இன்றைக்கு மாத்திரம் எதற்கும் பயப்படாமலிருப்பேன்;

(6) இன்றைக்கு மாத்திரம், யாருக்கேனும் ஓர் உபகாரம் செய்துவிட்டு, அதை வெளியில் சொல்லாமல் இருப்பேன்.

—என்பதுதான் குமுதம் கூறும் கருத்துக்கள். இது குமுதம், தன் வாசகர்களுக்காக என்று, தயாரித்து, முக்கியத்துவம் கொடுத்து, வண்ணங்களின் எழிலோடு வெளியிட்டிருக்கிறது.

யாரோ ஒருவரால் கூறப்பட்ட கருத்துதான் இவைகள் என்றால், அதன் அடியிலே அந்த யாரோ ஒருவரின் பெயர் மிகச் சிறிய எழுத்திலேனும் இடம் பெற்றிருக்கும் என்பது நிச்சயம்! பெயர் ஏதுமில்லை. எனவே, இது, குமுதம், அந்த இதழிலேயே தலையங்கம் எழுதி இருப்பதுபோல, அந்தத் தலையங்கத்துக்கு எவ்வளவு முக்கியத்துவம் உண்டு என்று அந்த இதழ் கருதுகிறதோ, அவ்வளவு முக்கியத்துவமும் இந்த இன்றைக்கு மாத்திரம் என்ற கருத்துக்கும் உண்டு என்ற எண்ணத்திலேதான் அது வெளியிட்டிருக்கிறது. அதுவும் தனது வாசகர்களுக்கென்று வெளியிட்டிருக்கிறது!

'இன்றைக்கு மாத்திரம்'—என்ற அந்த சிந்தனைகளிலே நண்பா, நான் குறை காணவில்லை; களங்கம் காணவில்லை; நாடு முழுவதும், நாட்டு மக்கள் முழுவதும், அன்றாடம் எழுந்தவுடன், அந்தச் சிந்தனைகளைப் பல முறைப் படித்துவிட்டு, அதன்படியே ஒழுக வேண்டும் என்றுதான் நானும் பெரிதும் விரும்புகிறேன்.

மறுபடியும் படித்துப் பார் நண்பா! அடைப்புக் குறிக்குள் வரிசை எண்கள் கொடுத்திருப்பது எனது கைச்சரக்கு, சில வசதிக்காக அந்த வசதியினைப் பயன்படுத்திக்கொண்டு, மூன்று என்று எண் குறிப்பிடப்பட்டுள்ள கருத்தினைப் படி!

இன்றைக்கு மாத்திரம் என் மனம் புண்படுகிற மாதிரி ஏதேனும் நடந்திருந்தால், அதை யாரிடமும் காட்டிக்கொள்ள மாட்டேன்!

(2-ஆம் பக்கம் பார்க்க)

“அண்ணன்மேல் ஆணை!”

— பொடியன் —

அண்ணன்மேல் ஆணை! என் அன்னைமேல் ஆணை! ஆருயிர் தமிழ்மேல் ஆணை! மண்ணின் மானங்காக்கும் மறவர் படையும், மாத்தமிழ்ப் பகையழிக்கும் வீரர் குலமும் என் இனம் என்பது உண்மையானல் என்மீது ஆணை! அண்ணன் அளித்த அரசை, அருமைக் கலைஞர் காக்கும் அரசை, உள்ளம் தமிழென்போர் உள்ள அரசைக் கண்ணெனக் காப்பேன்! கண் கொடுத்தும் காப்பேன்! எதிரிகளின் கொடுமைப்பசிக்கு என்னையேஉணவாக்கி உயிரைப் பணமாக்கிப் பாது காப்பேன்!! பொய்யைக் கணையாக்கி, புன்மையை வில்லாக்கி, கயமைக் கைகளால் கண்மூடி எய்யும் கருத்து மூடங்களின் கனவைப்பொடியாக்கிக் கன்னித் தமிழரசைக் காப்பேன்! காப்பேன்!!

எங்கோ ஒரு ‘பொடியன்’ எடுக்கும் உறுதியல்ல இது! எழுச்சித் திருவுருவங்களாக, கொள்கைக்காக எதையும் கொடுக்கும் குணக் குன்றுகளாக ஆயிரமாயிரம் அரிமாக்கள் எடுத்துள்ள உறுதி இது!!

நந்தமிழ்க்கு ஒரு காலம் நண்ணுமா? பகுத்தறிவுச் சிந்தனையைப் பயிராக்கும் நேரம் வருமா? தமிழன் என்றெரு இனம் உண்டு; தனியே அதற்கொரு குணம் உண்டு என்று இந்த உலகம் ஒப்புக் கொள்ளும் வகையில் நாடு முன்னேறுமா? இதோ ஒரு தமிழ் மகன்; இணையிலாப் பெருமகன்; புகழ் மகன் என்று இப்பாரேத்தும் காலம் வருமா? இந்த அரசு தமிழரசு; இதன் நோக்கம், கொள்கை எல்லாம் தமிழ் வளர்பபே என்னும் தகையார்கள் ஆட்சிப் பொறுப் பேற்கும் பொழுது மலருமா? குட்டக் குட்டக் குனியும் கொடுமை மாறி ‘உரிமைக் குரல் கொடுப்போம்; உறவுக்குக் கை கொடுப்போம்’ என்னும் நலை நிமிர்வு தமிழனுக்கு வருமா? என்றெல்லாம் ஏங்கிய நெஞ்சங்களுக்கு இன்பமளித்த ‘பச்சைத் தமிழரசு’ நாட்டில் மலர்ந்ததே, அந்நிலை குருடன் வாயில் கொட்டிய தேனு? இல்லையே!! எதிர்பாராது கிடைத்த செல்வமா? இல்லையே!! உழைப்பின்றிக் கிடைத்த ஊதியமா? இல்லையே!!கிணறு தோண்டும்போது கிடைத்த புதையலா? இல்லையே!!

தமிழக அரசு ... தமிழக அரசு

சிறப்புக் கட்டுரை!

என்று நாவினிக்கச் சொல்லிச் சொல்லி சுவைக்கின்றேமே, காதினிக்கக் கேட்டுக்கேட்டு மகிழ்ச்சி பெறுகிறேமே, இந்த அரசைக் காண, அண்ணுவின் தலைமையில் நாம் தாண்டி வந்த காட்டாறுகள் எத்தனை? ஏறிக்கடந்த எரிமலைகள் எத்தனை? நாம் சந்தித்த காட்டுத் தீக்கள், கடும் புயல்கள் எத்தனையெத்தனை? தொல்லைகளின் வகைகளையும், துயர வரிசைகளையும், உடம்பில் உள்ள அத்தனை உறுப்புக்களிலும் அடையாளங்களாகப் பெற்ற பிறகுதானே நம் அரசைக் கண்டோம்; நல்ல அரசைப் பார்த்தோம்: நந்தமிழ் கொலுவேறக் கண்டோம்!!

மன்னிக்கவும்! காட்டு நாய்களினுல் கடித்துக் குதறப்பட்டோரின் கணக்கினை நாடறியாதா? ஓநாய்களால் ஏமாற்றப்பட்டு இதயம் நொந்தோரை எவரால் மறக்க முடியும்.! பேராசைப் புலிகளால் பிய்த்தெறியப்பட்டோரின் பட்டியலை எழுதத்தான் முடியுமா!! அப்பப்பா!! கழகத்தின் வரலாற்றில் தியாக அத்தியாயங்களாகத் தங்கள் வாழ்வினைப் படைந்துக் கொண்டோரின் எண்ணிக்கையை எண்ணத்தான் முடியுமா? எத்தர்களால் மறைக்கத்தான் முடியுமா?

அத்தனையும் எதற்காக? அன்னை மொழிக்காக்க!! அன்னை நிலம் காக்க!! மூடத்தனங்களை மூடி மறைக்க!! பகுத்தறிவுச் சுடரைக் குன்றின்மேல் ஏற்றிவைக்க!! “நாமார்க்கும் குடியல்லோம்” என்னும் நன்னிலையைக்காண!! அடிமை நிலைத்தீவட்டிகளை ஆணைக்க!! உரிமைக்கனலை உலகறியச் செய்ய!!

கண்ணீர் விட்டு வளர்த்த கழகப் பயிரைக் காட்டெருமைகள் அழிக்க வருமென்றல், காளையாகள் அண்ணன் மேல் ஆணையிட்டு, வேலியாக நிற்க மாட்டார்களா? நிற்பார்கள்!! நிற்க வேண்டும்!! கொட்டும் மழையில் அண்ணனுல் வித்திடப் பெற்று, நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, பூத்துக் குலுங்கிப் புதுமைமணம் பரப்பும் கழகக் கொடியை அறுத்தெறியவந்து ஆர்ப்பாட்டம் செய்யும் அற்பங்களை அநாதைகளாகத் திரியவிடுவது யார் பொறுப்பு!! நாமே கழகம் என்றான பிறகு, நம்மைக்காக்கக் கழகத்தைத்தானே காக்க வேண்டும்!! நாட்டிற்காகக் கழகம் என்றால், கழகத்திற்காக நாம்தானே உள்ளோம்!!

தன்னையே உருக்கிக் கொண்ட நம் தலைவன், நம் அண்ணன் உருவாக்கி, உலகம்காண வளர்த்து நம் கையில் ஒப்படைத்துச் சென்றரே, அந்தக் கழகச் செல்வத்தைக் கள்வர் கொள்ளவிடலாமா? விடுவோமா? கயவர் அழிக்கப் பார்ப்போமா?

காலம் நம்கடமையைச் செய்ய அழைக்கின்றது; அதன் சுட்டுவிரல், பகைப்புலம் காட்டிப் படைநடத்து என்று ஆணையிடுகிறது; அதன் பொருளை உணர்ந்து போர்க்கோலம் கொள்ளவேண்டிய நேரம் நெருங்கி விட்டது.

கொஞ்சம் எண்ணிப் பார்ப்போம்! வாய்க் கொழுப்பும், வயிற்றெரிச்சலும் கொண்டவர்களைச் சிந்திப்பீர் என்று நம்மால் கேட்க முடியாது; காரணம், அவர்கள் உள்ள வற்றல் மரம்; அது தளிர்ப்பதேது? அரசியல் காழ்ப் புணர்ச்சியால் அறிவைத் துறந்து அறத்தை மறந்து விட்டவர்களைச் சிந்திப்பீர் என்று நம்மால் வேண்டிக் கொள்ள முடியாது; காரணம், அவர்கள், மகன் ‘செத்தாலும் சாகட்டும் - மருமகள் தாலியறுக்கட்டும் என்னும் ‘மாமிப் புத்தி’யைக் கொண்டவர்கள்.

எனவேதான், நாம் சற்று எண்ணிப் பார்ப்போம். தமிழக வரலாற்றில், மொழித் துறையைப் பொறுத்தவரை தாய்மொழிக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்த அரசுகளைக் காண முடிகிறதா? இந்த மண்ணுக்குத் தமிழகம் என்றுகூட பெயர் சூட்ட விரும்பாதவர்களைத் தானே வரலாறு கண்டது!! உழவர் பெருங்குடி மக்கள், எதற்கெடுத்தாலும் ‘எங்கே ஆபீசர்... எங்கே ஆபீசர்’ என்று ஊர்வலம் வந்த நிலையை மாற்றி, உழவனைத் தேடி உத்தியோகத்தில் இருப்போரைச் செல்ல வைத்த அரசை இந்தியத் துணைக் கண்டம் கண்டதுண்டா? தன்னல் முடிந்த வரை இம்மண்ணுயரப் பாடுபடும்

அரசை இம்மாநிலம் கண்டதுண்டா?

ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்கிறோம் என்று இல்லாமையைப் போக்க எண்ணியோர் உண்டா? பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம் என்றொரு திட்டத்தை இந்தியப் பெருநிலத்தில் எந்த மாநிலத்திலாவது கண்டதுண்டா? சமதர்ம திட்டம், சமதர்ம திட்டம் என்று சிந்து பாடுவதோடு சரியென்னும் சந்தர்ப்ப வாதிகளுக்கு இடையே உண்மையான சோசலிச நோக்கத்தைச் செயற்படுத்தும் அரசை தமிழகத்தைத் தவிர வேறு மாநிலங்களில் காட்ட முடியுமா?

பகுத்தறிவுப் பணிகளில் தன்னை ஈடுபடுத்தித் தளராது உழைக்கும் தமிழக அரசினைப் போன்றதொரு அரசை இதுவரைக்கண்டதுண்டா? இனிமேலும் காணும் வாய்ப்புண்டா? எல்லாச் சிறப்புக்களையும் கொண்ட இவ்வரசுக்கு ஒன்று தான் இல்லை!!

மேட்டுக் குடியினரும், மேனி மினுக்கிகளும், மாளிகை வாசிகளும், ஆடையில் அழுக்குப் படியா அரசியல் வாதிகளுமே இருந்த ஆட்சியில், அத்தகையோர் இல்லை யென்ற குறை ஒன்றைத் தவிர வேறொரு குறையும் இல்லை.

அந்தக் குறை ஒன்றுண்டு என்பதுதான் சிலரின் உள்ளத்தில் அணைக்க முடியாத நெருப்பாகி விட்டது.

'இதுகள் அரசிலா...!! இருக்கலாமா!!' என்று ஆயாசப் பட்டவர்கள், இன்று 'இருக்க விடுவோமா? என்று எழுந்துவிட்டார்கள். ஏதுமறியாதவர்களுக்கு இது எழுச்சியாகப் படலாம். ஆனால்...! நமக்கு!! சுடப்படும் பிணம் விரைத்துக் கொண்டு எழுமாமே, அந்தப் பிணத்தின் எழுச்சிக்கும் இதற்கும் வேறுபாடில்லை. சுடலையைக் காப்பவன் எழுந்து நிற்கும் பிணத்தைக் கண்டு அஞ்சாமல், கைத்தடியால் இடம் பார்த்து ஒன்று கொடுப்பானும்! பிறகு, அது இருந்தவிடம் தெரியாமல் போய் விடுமாம்.

இந்தஉண்மையை எரிந்துகரிந்து போன சில கரிக்கட்டைகளுக்கு நாம் உணர்த்தியாகவேண்டும்.

ஊழல் என்பார்கள்; ஏங்கே என்றால், 'ஊழல்...ஊழல்' என்பார்கள்!! பின்னும் கேட்டால் 'எங்கும் ஊழல்... எதிலும் ஊழல்' என்பர்கள்!! உடம்பில் தினவெடுக்க, அருகில் இருந்தவனைப் பார்த்து 'ஊரல் ஊரல்' என்று சொல்ல, தூங்கிவழிந்த சிலருக்கு ஊழல் ... ஊழல் என்று கேட்க, முன்னும் பின்னும் கூட்டி குறைத்து செய்தியாக தொடுக்க, மாலை ஏட்டிலும் காலை ஏட்டிலும் வெறும் ஊழலாகவே எல்லாம் காட்சி தரும்.

ஈன மணிகளுக்கும், இனத் துரோக 'ஓசை'களுக்கும், இடக்கர்களுக்கென்றிருக்கும் ரிச்சல் 'மணி' களுக்கும் ஒலி எழுப்புவதே வேலை! அந்த ஒலிகளில் ஊழல்களைத் தவிர வேறொன்றும் இருக்காது.

பிறகென்ன!! தலையங்கங்கள் தீட்டுவார்கள்!! ஊழலைக் காட்ட நீதிபதிகள் தேவை விசாரணை வேண்டும்!! முதலமைச்சர் பொறுப்பை உணர்ந்து குழு அமைக்க வேண்டும்!! அப்பப்பா! சகுனியும் கூனியும் செத்துவிட்டார்களா என்று நமக்கே சந்தேகம் வரும்.

எங்கோ இருக்கும் இருட்டு வேலைக்காரி ஊராரின் புகழோடு, உற்றார் வணங்க வீட்டோடு இருக்கும் பத்தினியை விபச்சாரி என்பாளாம்; கணவனிடம் சென்று, ஆராய்ந்து பார்க்க ஐவர் குழு தேவை என்பாளாம்.

அவ்வளவுதான்!

கணவனைக் கண்டிக்கும் தீர்மானங்கள்; கடுமையான விமரிசனங்கள்!!

மனைவியை அறிந்த மணவாளன் 'ஊர் கெடுக்கும் நாயே! உனக்கென்ன வேலை!!' என்றால், விவாகரத்து செய் என்று போராட்டம் நடத்துவாளாம்.

இந்த இருட்டு வேலைக்காரிகளுக்கும், இங்குள்ள ஊழல் அரசியல் வாதிகளுக்கும் உள்ள உறவை யாரும் பிரிக்க முடியாது. 'எதிர்க்கட்சிகள்' என்பதற்கு என்ன பொருள் என்பதை வள்ளுவரை எழுப்பித்தான் இவர்களுக்கு உணர்த்த வேண்டும்! ஒருவேளை, இந்த அறிவுக் கொழுந்துகள் 'உன் பேச்சே ஊழல்; உன் பொருளும் ஊழல்' என்று வள்ளுவரையே ஊழலாக்கிக் காட்டினாலும் வியப்படைவதற்கில்லை.

மனைவி, மக்களிடமும் இவர்கள் கொஞ்சும் போதும், குலவும் போதும் அஞ்சுகமே, தேனே, அழகு நிலவே' என்றெல்லாம் கொஞ்சுதற்கு மறந்து, 'ஊழலே', ஒடிப்போன பதவியே, லஞ்சமே' என்று தான் கொஞ்சுவார்கள். என்ன செய்வது! அவர்கள் நினைவெல்லாம் ஊழல்; நெஞ்செல்லாம் ஊழல்; உள்ளமே— ஊழலா[illegible] உலகே ஊழல் மயமாகத்தானே [illegible] பேசும்!! எதையும் பேசும் நாக்கும், எதையும் அச்சேற்றும் தாளும் கழகக் கோபுரத்துக் கலசத்தின் தூசைக்கூட அசைக்க முடியாது என்பதை உணர மறுப்பவர்களை, மக்கள் உள்ளம் மறக்கத்தான் போகிறது.

நேற்றுவரை முதலாளிகளின் நிழலில் தூங்கியவர்கள் இன்று தொழிலாளி...தொழிலாளி என்று ஒப்பாரி வைக்கின்றார்களே எதற்காக? தொழிலாளிகளின் மண்டை ஓடுகளை மாலையாக்கி அணிந்த மார்புகள், தொழிலாளர்களை அணைக்கத் துடிக்கின்றனவே ஏன்? உண்டியல்எடுத்தே உடல் கொழுப்பவர்கள், உழைப்போரின்வியர்வை வெள்ளத்தில் தொழிற் சங்க ஒடம் விட்டு, அரசியல் கரையேறத் துடிப்போர்கள் 'அய்யோ தொழிலாளி'என்றுஅலறி துடிப்பானேன்?

எல்லாம் அரசியல்!! எங்கிருந்தோ தூண்டி விடுவோரின் துரோக அலைகள் மோதிக் கிடப்பதும் அரசியல்தான்!! ஊழல் என்று ஒரு பக்கம் கத்துவது; உரிமைக் கிளர்ச்சி என்று போராட்டப் பெயரால் பூகம்பத்தை உண்டாக்குவது; சட்டம் இல்லை; ஒழுங்கு ஒழிந்தது. தொழில் அமைதி துளியும் இல்லை என்று நாளை முழக்கமிட முடிவெடுத்து, அதற்காகப் பணி புரியும் அற்பம் எல்லாம் அரசியலேதான்!!

மக்களால் உருவாக்கப் பட்ட அரசை மக்களுக்காக உள்ள அரசை நேருக்குநேர் வெல்லமுடியாதவர்கள், தமக்கென்றுள்ள வழியில், பழக்கமான முறையில் கவிழ்த்து விடலாம் என்று கருதுபவர்களுக்கு துணை போகும் இடக்கர்களையும், துடுக்கர்களையும், அண்ணன் வழி நின்று சந்திக்க வேண்டியவர்கள் நாயாகத்தான் இருக்கமுடியும்!

அண்ணனின் கொள்கைகள் அனைத்தும் நிறைவேறும் வரையில் நமதரசு இருந்தே தீரவேண்டும்!! அதுவரை நரிகளின் தந்திரத்தை முறிக்க வேண்டும்; கிழப் புலிகளின் கீழறுப்பு வேலைகளைக் கிள்ளியெறிய வேண்டும்; நோஞ்டிச் சிங்கங்களின் நோக்கங்களை நொறுக்க வேண்டும்; காகிதக் கோட்டான்களின் கத்தலைத் தடுக்கவேண்டும்; இனத்துரோக எலிகளின் ஈன செயல்களை எதிர்க்கவேண்டும்!

யார்? நாம்!!

நமக்காக நாம் இவற்றைச் செய்யவேண்டும்!

நந்தமிழ்க்காகச் செய்யவேண்டும்!!
நாட்டிற்காகச் செய்யவேண்டும்!!
அண்ணன்மேல் ஆணையிடுவோம்!
அணிவகுத்துப் புறப்படுவோம்!!
அலைகளென எழுவோம்!!

எதிர்ப்புத் துரும்புகளை இல்லாமல் செய்வோம்!

புட்டோ எப்போது யாகியாகான் ஆவார்?

(சீயேயெம்)

பிரஞ்சு நாட்டில் தோன்றிய நெப்போலியனை விட, வீரத்திலும் விவேகத்திலும் சிறந்த ஒரு சர்வாதிகாரி, உலகத்தின் எந்தப் பகுதியிலும் தோன்றியதுண்டா?

துணிவு ஒன்றில் மட்டுமே சிறந்து விளங்கிய ஜெர்மன் நாட்டு அடால்ப் ஹிட்லரைப் போலவாவது இதுவரையில் ஒரு சர்வாதிகாரி தோன்றி இருக்கிறானா?

ஆட்டுமந்தைகளாக மக்கள்' இருக்கின்ற வரையில் எந்தவொருவனும் எந்தக் காலத்திலும் இஷ்டம் போலவெல்லாம் ஆட்சிபுரிந்து ஆடிக் களிக்க முடியும்.

அடிபட்ட நாகம்கூட சாவதற்கு முன்பு பயங்கரமாகச் சீறிவிட்டுத் தான் சாகிறது என்கிறார்கள்

ஒரு நாடு எவ்வளவு பின் தங்கிய நிலையிலிருந்தாலும், தாக்குதலும் நெருக்குதலும் அதிகரிக்க, அதிகரிக்க அந்நாட்டு மக்களது ஆத்திர உணர்ச்சி, எந்த ஒருவரது தூண்டுதலும் இல்லாமலேயே எதிரொலிக்கத் தொடங்கிவிடும் என்பதற்கு உலக வரலாற்றில் பலப்பல சான்றுகளைக் காண முடிகிறது.

நெப்போலியனுடைய வீழ்ச்சியும் ஹிட்லரது அழிவும் இவ்வகைக் கூற்றுகளுக்கு இலக்கியங்களாக கால காலத்திற்கும் இருந்து கொண்டே இருக்கத்தான் போகிறது.

உலகத்துச் சர்வாதிகாரிகளது பட்டியல் ஒன்று தொகுக்கப் படுமானால், அதிலே தமது பெயரும் இடம்பெற வேண்டும் என்று விரும்பிச் செயல்படுபவர்களைத் தடுத்து நிறுத்த சிலகாலத்திற்கு எல்லாராலும் முடியாதுதான். ஆனால் பட்டியலிலே இடம்பற்றிக் கொள்ளப் போதுமான செயல்களைச் செய்து முடித்து விட்ட பின்பு, அத்தகையவர்களது ஆணவம் அழிக்கப் பட்டுவிடுகிறது, அந்தந்தநாட்டு மக்களது எழுச்சி காரணமாக!

பாகிஸ்தான் தனி ஆட்சி உரிமை பெற்று, முகமதலிஜின்னா, சுராவர்த்தி ஆகியோருக்குப்பிறகு, அதன் ஆட்சிக்கட்டிலில் அமர்ந்தோர் அத்தனைப்பேருமே, முன்னோருக்கு தான் சளைத்தவன் அல்ல என்கிற பெருமையைத் தேடிக் கொள்ளத்தக்க வகையில் சர்வாதிகாரிகளாகத்தான் மாறி ஆட்சி புரிந்திருக்கிறார்கள் என்பது நமது கண்முன்னே பசுமையாக இருக்கின்ற வரலாற்றின் கூறுகளாகும்

அயூப்கான், இராணுவ வெறி கொண்டு, இராணுவச் சட்டத்தின் துணைகொண்டு நாட்டு மக்களது வேட்கைகள், வேண்டுகோள்கள் இவைகளுக் கெதிராக, துப்பாக்கிகளையும், வெடிகுண்டுகளையும் நிறுத்தி வைத்துக் கொண்டிருந்த காலம் மாறியது—எழுச்சி என்பதன் பேரால்!

அந்த இடத்தை, அப்படியே ஆக்கிரமித்துக் கொண்ட யாகியாகானும், அயூப்கானுக்குத் தான் எந்த வகையிலும் சளைத்தவன் அல்ல என்பதைநிரூபித்துக் காட்டி விட்டு, இன்றைக்கு அவர் என்ன ஆனார் என்று அகிலமே வினாக்குறி எழுப்பிக் கொண்டிருக்கும் வகையில் செய்தியாகத் தன்னை ஆளாக்கிக்கொண்டு விட்டார்.

கிராமங்களில் ஒரு கதை சொல்வார்கள்; பெரிய ஜமீன்தார் ஒருவன் ஒரு மூடை நெல்லைக் கொடுத்துவிட்டு, பதிலுக்கு ஒரு மூடை அரிசியைக் கொடுக்க வேண்டும் என்று கேட்பானாம்!

எவ்வளவு பெரிய அநீதி இது? குடிமக்கள் கண்ணீரும் கம்பலையுமாக, அரும்பாடு பட்டு, எப்படி எப்படியோ சமாளித்து ஒரு மூடை நெல்லைப் பெற்றுக் கொண்டதற்கு ஒரு மூடை அரிசியைக் கொண்டு வந்து கொடுத்து விடுவார்களாம்!

காலச் சுழலில் அந்த ஜெமீன்தார் மூழ்கி விடவே, ஜமீன் பட்டத்துக்கு அவனது குமாரன் வந்து நின்றானாம்!

முடிசூட்டு விழாவெல்லாம் பிரமாதமாக நடைபெற்று, ஊர் மக்கள், பெரியவர்கள் அனைவரும் கூடி வாழ்த்துரை வழங்கி, "உன் தந்தையின் பெயர் நெடுநாள் நிலவும்படி வாழ்க" என்று வாழ்த்திப் போனார்களாம்!

பதவிக்கு வந்த புதிய ஜமீன், தந்தையின் பெயர் நிலைத்திருக்கும்படி என்ன செய்யலாம் என்று யோசித்து யோசித்து, கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தானாம்!

தந்தை ஒரு மூடை நெல்லைக் கொடுத்துவிட்டுத் தானே ஒரு மூடை அரிசி கேட்டார்; நான் ஒரு மூடை தவிட்டைக் கொடுத்து விட்டு, ஒரு மூடை அரிசி கேட்கிறேன்" என்று முடிவுக்கு வந்து, தனது மக்களிடம் அப்படியே அதனைச் செயல்படுத்தவும் முனைந்து விட்டானாம்!

ஊரிலே இறந்துபோன ஜமீனின் பெயர் "அவன் புண்ணியவான்!" என்கிற அளவுக்கு விரைவிலேயே பரவத் தொடங்கி விட்டதாம்! முன்னவனாவது ஒருமூடை நெல்லையாகிலும் கொடுத்தான்; மகனோ ஒரு மூடை தவிட்டை மட்டுமே கொடுத்துவிட்டு, ஒரு மூடை அரிசி கேட்கிறானே! முன்னவனே புண்ணியவான்!" என்று பேசத் தலைப்பட்டு விட்டார்களாம்!

தகப்பனின் பெயர் நிலைத்திருக்கும்படித் தான் சரியான ஒன்றையே செய்து முடித்த மகிழ்ச்சியில் இளைய ஜமீனும் மகிழ்ந்து போனானாம்!

இதுதான் கிராமத்துக் கதை.

இப்படித்தான் இருக்கிறது, யாகியாகானை அப்புறப்படுத்தி விட்டு, அந்த இடத்துக்கு வந்திருக்கும் புட்டோவின் கதையும்!

யாகியாகானது இராணுவ அடக்குமுறைகள் காரணமாக உள்நாட்டில் குழப்பமும், பூசலும் மிகுந்துவிட்டது என்கிற காரணத்தைக் காட்டி, தான் ஜனநாயக முறைப்படி பெரும்பான்மை மக்களால், பெரும்பான்மை ஸ்தானங்

உலக அரங்கில்

களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்சியின் தலைவன் என்ற முறையில், யாகியாகானிடமிருந்து பதவியைப் பறித்துக்கொண்டு விட்டு, அவரை அப்புறப்படுத்தி விட்ட அடுத்த விநாடியே, தானும் ஒரு இராணுவ வெறியன்தான் என்பதை அறிவித்துக் கொண்டுவிட்ட மகாமேதையாக இருந்துகொண்டிருக்கிறார் என்பதை, கிழக்கு வங்கத்தை இழந்துவிட்ட எஞ்சிய பாகிஸ்தானது நிகழ்ச்சிகள் நாளுக்கு நாள் உறுதிப்படுத்திக் கொண்டே இருக்கின்றன.

ஜனநாயகம் என்ற, சொல் காமராசரது வாயில் சிக்கிப் படும் பாட்டை விட, புட்டோவின் வாயிலும் பேச்சிலும் படாத பாடுபட்டுக் கொண்டிருப்பது பரிதாபகரமாகத்தான் இருக்கிறது.

ஜனநாயகத்தைக் காப்பாற்ற வேண்டுமானால் இராணுவச் சட்ட ஆட்சியால்தான் முடியும் என்று கூறி இரண்டு வாரங்கள்கூட ஆகவில்லை.

ஜனநாயகத்தின் பெயரைச் சொல்லிக்கொண்டு பதவியிலமர்ந்து, இராணுவச் சட்டத்தை ஏந்திக் கொண்டிருக்கிறார் இவரும் என்பதை, மக்கள் காலந் தாழ்ந்து புரிந்துகொள்ளவில்லை; மற்றவர்களுக்குக் கொடுக்கப்பட்ட காலகெடுகூட பாவம், புட்டோவுக்குக் கொடுக்கப்படவில்லை.

சூட்டோடு சூடாக புட்டோவுக்குச் சூடு கொடுக்கத் தொடங்கிவிட்டார்கள் பாகிஸ்தானத்து விழித்துக்கொண்ட மக்கள்.

அந்த மக்களுக்கு, கிழக்கு வங்கத்தில் உதயமாகி இருக்கும் பங்களாதேஷின் மெய்ப்பாடு எளிதில் புரிகிறது. அதன் தோற்றத்துக்கான காரணத்தையும் உணர்ந்துகொண்டிருக்கிறார்கள்.

எல்லைப்புற மாநிலங்களான பலுசிஸ்தானிலும், வடமேற்கு எல்லை மாநிலத்திலும், ஏற்பட்ட அமளி துமளிகள், மற்ற இடங்களுக்கும் பரவ நேரமாகவில்லை.

இன்னமும், யாகியாகானது முடிவு என்ன என்று நிர்ணயிக்கப்படவில்லை: அதற்குள் தனக்கு ஒரு முடிவு ஏற்பட்டு விடக்கூடுமோ என்ற அச்சம் புட்டோவைப் பற்றிக் கொண்டிருக்கவேண்டும்!

அதிகாரிகளுக்கிடையேயே கூட புட்டோவுக்கு எதிரான கருத்துக்கள் உருப்பெறத் தொடங்கிவிட்டதென்றால் — நிலைமைகள் எப்படி இருக்கவேண்டும்!

இன்றைய பாகிஸ்தானின் அதிபர் யார் என்ற வினவுக்கு, அதிகாரபூர்வமான விடை கொடுப்பதென்றால்—புட்டோ என்றுதான் சொல்ல வேண்டியிருக்கும்!

மந்திரங்களினால் மட்டுமே அற்புதங்களை நிகழ்த்த முடியும் என்று இனி எவரும் எதிர்பார்க்க வேண்டியதில்லை; அற்புதங்களைச் செய்து காட்ட அதிபர் புட்டோவினாலும் முடியும் என்பதை நிரூபித்துக் காட்டி இருக்கிறார் இந்தக்கிழமை!

ஆமாம்! அண்டை நாடுகள் மட்டுமல்ல, ஆதரவு காட்டும் அன்புக்குரிய அமெரிக்கா முதலான நாடுகள் கூட எதிர் பாராத வகையிலே, பாகிஸ்தானின் இராணுவத் தலைமையிலே திடீர் என்று மிகப் பெரிய மாறுதல்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

மாறுதல்கள் என்றால் இலாகா மாறுதல் கூட அல்ல; பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்களாம்!

இராணுவத்தின் தளபதி-பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்.

விமான படையின் தலைவர்பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்.

வேறு சில உயர் மட்ட அதிகாரிகள்—பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறாகள்!

கிழக்கு வங்காளத்திலே லட்சக்கணக்கான மக்களைக் கொன்று குவித்து, பல்லாயிரக் கணக்கான குடும்பப் பெண்கள் கன்னியர்கள், மாணவிகள் ஆகியோரது கற்பினைச்சூறையாடி மகிழக் காரணமாயிருந்த டிக்காகான் இராணுவத் தளபதியாக பதவிஉயர்வு பெற்றிருக்கிறார் அதிபர் புட்டோவின் அருளால்!

இத்தகைய இராணுவத்தலைமை மாற்றத்துக்கு மிக முக்கியமான காரணம் என்று யூகிக்கப்படுவது —பாகிஸ்தான் அரசு கவிழ்க்கப்பட்டு, இராணுவத் தலைமையினர் ஆட்சியைக் கைப்பற்ற சதி செய்தனர் என்பதுதான்!

இந்தச் செய்தியை உறுதிப்படுத்தக் கூடியதாக, இராணுவத் தளபதி ஜெனரல் குல்ஆசனும், விமானப் படைத் தளபதி ரகிம்கானும் இப்போது வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்றசெய்தி தலை தூக்கிக் கொண்டிருக்கிறது.

அல்லாமல், அதிபர் புட்டோவுக்கு இராணுவ நெருக்கடிகள் ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்றும்கூட அரசியல் பார்வையாளர்கள் கருத்தறிவித்திருக்கிறார்கள்.

அமெரிக்க அதிபர் நிக்சன்—சூ-யென்-லாய் ஆகியோரது பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகு வெளியிடப் பெற்ற கூட்டறிக்கையை அடுத்து நிகழ்ந்திருக்கும் இந்த மாற்றங்கள் இப்போது அரசியல் முக்கியத்வமுடையதாகி விட்டன!

சதி முறியடிக்கப்பட்டதன் விளைவாக இப்படி நடந்திருக்கிறது என்று கூறப்படுவது சரியானதாக இருக்குமானால், அதிபர் புட்டோ, தன் பதவியைத் தற்காலிகமாகத் தக்கவைத்துக் கொண்டிருக்கிறார் என்றே கருதவேண்டும்.

உட்பகையை வெற்றி கண்டுவிட்ட இரண்டு நாட்களிலேயே, புறப் பகையை வெற்றி கொள்ளத்

(2-ஆம் பக்கம் பார்க்க)

இளந்திரையன் தம்பதியர் தமிழகம் வருகை

தில்லிப் பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர், கவிஞர் சாலை இளந்திரையன் அவர்களும் அவருடைய மனைவியார் (திருவேங்கடவன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியை) திருமதி சாலினி இளந்திரையன் அவர்களும், வழக்கம் போல், 1972 மே-ஜூன் மாதங்களில் தென்னகச்சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொள்ளுகிறார்கள்,

சாலைத் தம்பதிகள் மே மாதம் முதல் வாரத்தில் சென்னை வந்து சேருவார்கள். மே பிற்பகுதியிலும் ஜூன் முற்பகுதியிலுமாகச் சுமார் ஒரு மாத காலம் தமிழகம், கேரளம், கன்னடம் ஆகிய மூன்று மாநிலங்களிலும் சுற்றுப் பயணம் செய்வார்கள்.

இந்தச் சுற்றுப் பயணத்தின் போது ஆங்காங்கு உள்ள இலக்கிய, சமுதாய பண்பாட்டு நிறுவனங்களின் நிகழ்ச்சிகளிலும் சாலையர் கலந்து கொள்வார்கள், குறிப்பாக, பல பகுதிகளிலும் உள்ள பகுத்தறிவாளர்களைக் கண்டு பேசவும் அறிவுப் பணிக்கு ஆன புதிய வழிவகைகளை ஆராயவும் பேராசிரியத் தம்பதிகள் பெரிதும் விரும்புகிறார்கள்.

சாலைத் தம்பதியரின் சொற்பொழிவு, கலந்துரையாடல் முதலியவற்றுக்கு ஏற்பாடு செய்ய விரும்பும் அன்பர்கள் டாக்டர் சாலை இளந்திரையன் (3362/1 கிறிஸ்டியன் காலனி, புதுடில்லி. 5) அவர்களுடன் உடனேயே தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

எனக்குப் பிடித்தது

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுதான்.

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுகளை வாங்குவதே எனது பழக்கம்.

இன்றே வாங்குங்கள்

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

ஒரு லட்சம் ரூபாய் பரிசு பெறுங்கள்.

மொத்தப் பரிசுத் தொகை ரூ. **10,50,000***

மொத்த பரிசுகள் **3198**

மொத்த வரிசைகள் : மூன்று

முதல் பரிசு: ஒரு லட்சம் ரூபாய் (ஒவ்வொரு வரிசைக்கும்)



குலுக்கல் நாள்: **30-3-1972**

பரிசுச் சீட்டு ஒன்றின் விலை: ரூ. 1/- தான்

தமிழ்நாடு பரிசுச் சீட்டு இதுவரை 278 லட்சாதிபதிகளை உருவாக்கியுள்ளது!

கடிதத் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டு திட்டம், சென்னை-2.

விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9

*3 வரிசைகள் வெளியீட்டுக்கு உரியது.

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-2